அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்

சிவமயம்.

கணபதி துணை.

# அதிர்ஷ்ட மிர்த்திகா

க்ஷேத்திரம் என்னும்

# திருக்கானாட்டுமுள்ளூர் தலபுராணம்.

---

இஃது,

கானாட்டுமுள்ளூர்

ஸ்ரீ சாமிநாத தேசிகர் அவர்கள்

சம்ஸ்கிருதத்தில் எழுதியதை

தில்லை ஸ்ரீமான்

மீ. ராஜகணேச தீக்ஷதர் அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று

கானாட்டுமுள்ளூர்

ஸ்ரீ சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களின்

நன்முயற்சியால்

சீர்காழி ஸ்ரீ அம்பாள் பிரஸில்

அச்சிடுவிக்கப்பெற்றது.

காப்பிகள் ௫௱.] 1939. [விலை அணா 4.

# முகவுரை.

மங்கல விநாயக ளெங்கு மணஞ்செய்கம் பலைக ளெங்கும், பங்கய வதன மெங்கும், பண்களின் மழலை யெங்கும், பொங்கொளிக் கலன்க ளெங்கும் புதுமலர்ப் பந்த ரெங்குஞ், செங்கயற் பழன மெங்குந் திருமக ளுறையு ளெங்கும் எனச் சிறப்பு வாய்ந்த சோழமண்டலத்தில் தக்ஷிண கங்கை யாகிய காவிரியின் வடபால் அமைந்ததும் தீர்த்தம் தலம் மூர்த்தி என்னும் மூன்று விசேடங்களும் ஒருங் கமையப்பெற்றதுமாகிய சிதம்பரம் என்னும் திவ்விய மகா க்ஷேத்திரத்தை முதன்மையாகக்கொண்டு அதன் பக்கத்தே எண்ணிறந்த சிவ க்ஷேத்திரங்கள் வட மொழிஸ்காந்தத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அவற் றுள் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பாடல் அமையப் பெற்றதும் பதஞ்சலி முனிவரால் பூஜிக்கப்பெற்றதும் மதூகவனம், அதிர்ஷ்டமிருத்திகா என்னும் சிறப்புப் பெயர்கள் பெற்றுள்ளதுமாகிய திருக்கானாட்டுமுள்ளூர் என்னும் க்ஷேத்திரம் தில்லைக்குத்தென்மேற்கில் அமைந் துள்ளது.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருக்கானாட்டுமுள்ளூர் வடமொழித் தலமான்மியத்தைச் செந்தமிழ்ப்பயிற்சி யுள்ளாரும் நன்குணருமாறு தில்லைவாழந்தணருள் ஒருவ ராகிய ஸ்ரீமான். ஸ்ரீ. ராஜகணேசதீக்ஷிதர் அவர்கள் அதி சிரத்தையுடன் தமிழில் வசன ரூபமாக மொழி பெயர்த்து, கானாட்டுமுள்ளூர் திருப்புராணவசனம் என் னும் பெயருடன் எழுதி உதவியிருக்கிறார்கள்.

இச்சிறந்த நூல்வழியினாகச் செந்தமிழ் வளர்ச்சி யையும் சிவபக்தி மேன்மையையும் ஒருங்கு யாவரும் பெறவேண்டும் என்ற தயாள குணத்தால் கானாட்டு முள்ளூர் ஸ்ரீமான் சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள்

பெரும்பொருள் செலவிட்டு இப்புராணத்தை அச்சிடு வித்து யாவர்கைக்கும் எட்டுமாறு உபகாரம் செய்திருக்கிறார்கள்.

இங்ஙனம் இந்நூலைச் செந்தமிழில் மொழிபெயர்த்த ஸ்ரீமான் மீ. ராஜகணேச தீக்ஷிதர் அவர்கட்கும் இதனை அச்சில் வெளியிட்ட ஸ்ரீமான் சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கட்கும் இத்தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டு தற்கு உரியது "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரி மாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

சிவநேசச்செல்வர்கள் அனைவரும் இப்புராணத்தை விதிப்படி படனஞ்செய்து ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரர் திருவருட்பிரசாதத்தைப் பெற்றுய்யும்வண்ணம் பிரார்த்திக்கிறேன்.

சுபம்.

இங்ஙனம்,

சீர்காழி, 3—3—39.

**சி. கல்யாணசுந்தரம்பிள்ளை,**
ஆசிரியர்,
முதல்நிலை ஆரம்பபாடசாலை,

உ

சிவமயம்.





ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரர்





ஸ்ரீ பதஞ்சலி
முனிவர்.

# பொருளடக்கம்.


| அத்தியாய் நெ. | அத்தியாயத்தின் பெயர். | பக்கம் நெ. |
|---|---|---|
| 1 | நைமிசாரண்யர் தலம் வினவிய படலம். .... | க |
| 2 | நந்திதேவர் பதஞ்சலிக்கு தல விசேஷம் உரைத்த படலம் .... .... | ந |
| 3 | பதஞ்சலி முனிவர் முக்தியடைந்த படலம்.... | ரு |
| 4 | அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரம் என்னும் பெயர் பெற்ற படலம் .... .... | கூ |
| 5 | தீர்த்தங்களின் மகிமை உரைத்த படலம் .... | யந |
| 6 | சூர்ய புஷ்கரணி உற்பத்தி உரைத்த படலம் .... .... | உ0 |
| 7 | அதர்மா, அசாந்தன் என்னும் இருவர்களின் சாபம் நீங்கு படலம். .... .... | உஎ |
| 8 | பிராமணர் மகப்பேறு பெற்ற படலம் .... | நந |
| 9 | தர்மவர்மன் மோக்ஷமடைந்த படலம் .... | நகூ |
| 10 | மாண்டவ்யரிஷி வரம்பெற்ற படலம் .... | சஅ |
| 11 | சுபத்திரன் புத்திரப்பேறு அடைந்த படலம் .... .... | ருஎ |

உ

# புராண வரலாறு

இஃது ஸ்காந்த புராணம் என்னும் வடமொழி நூலில் 11 அத்தியாயங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஷை பிரதிக்கிணங்க கைப்பிரதியாக காஞட்டு முள்ளூரில் வசித்து வந்த காலஞ்சென்ற மகா-ா-ா-ஸ்ரீ சாமிநாத தேசிகர் அவர்களால் எழுதிவைக்கப்பட்டு ஷையார் குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ முத்துகுமர தேசிகர் அவர்களிடமிருந்த இந்த க்ஷேத்திர மகாத்மியம் சமஸ்கிருத பாஷையிலிருந்ததை சிதம்பரம் கீழவீதியில் 16-ெந. கிரஹத்தில் வசிக்கா நின்ற தில்லைவாழந்தணர்களில் ஒருவராகிய காலஞ்சென்ற ஸ்ரீமான், மீஞட்சி சுந்தரதீட்சதர் அவர்கள் குமாரர் ஸ்ரீமான், ராஜகணேச தீட்சதர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஈஸ்வரஷு சித்திரைமீ

1937ஷு ஏப்ரல்மீ

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்காளூட்டுமுள்ளூர் தலபுராணம்.

---

## விநாயகர் வணக்கம்.

திருவும் கல்வியும் சீரும் சிறப்புமுன்
திருவடிப்புகழ் பாடுந் திறமு நல்
உருவுஞ் சீலமு மூக்கமுந் தாழ்வுறு
உணர்வுந் தந்தென துள்ளத் தமர்ந்தவா
குருவுந் தெய்வமு மாகியன் பாளர்தங்
குறை தவிர்க்குங் குணப்பெருங் குன்றமே
வெருவுஞ் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே.

## பரசிவ வணக்கம்.

அன்பெனும் பிடியுள் அகப்படுமலையே
அன்பெனும் குடில்புகு மரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புரு வாம் பர சிவமே.

## சிவசத்தி வணக்கம்.

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும் உட் பிரியாத சாந்தமும்
புந்திதள ராத நிலையும்
எய்யாத வாழ்வும் வேறெண்ணாத நிறைவும் நினை
என்றும் மறவாத நெறியும்
இறவாத தகவும் மேற் பிறவாத கதியும் இவ்
ஏழை யேற்கருள் செய்கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம் வீசும்
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணி விளக்கே
ஐயாற நங்கொண்ட தில்லையம்பதி மருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்டமும் சராசரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

வள்வாய மதி மிளிரும் வளர் சடையினானை
மறையவனை வாய்மொழியை வானவர்தங்கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி யுமிழ்ந்தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூ லான்முகத்தினானை
முள்வாய மடறுழுவி முடத்தாழை யீன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (1)

ஒருமேக முகிலாகி யொத்துலகந்தானு
யூர்வனவு நிற்பனவு மூழிகளுந்தானுய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்களைந்தாய்ப்
புணைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையினானைத்
திருமேவு செல்வத்தார் தீ மூன்றும் வளர்த்த
திருத்தக்க வந்தணர்க ளோது நகரெங்கும்
கருமேதி செந்தாமரை மேயுங் கழனிக்
கானாட்டுமுள்ளூரிற் கண்டு தொழுதேனே. (2)

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினானை
யிறைவனை மறையவனை யென்குணத்தினானைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடுஞ்
சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை
அரும்புயர்ந்த வரவிந்தத் தணி மலர்களேறி
யன்னங்கள் விளையாடு மகன்றுறையினருகே.
கரும்புயர்ந்து பெருஞ்செந் நெனெருங்கி விளைகழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (3)

பூளைபுனை கொன்றையொடு புரிசடையினானைப்
புனலாகி யனலாகிப் பூதங்களைந்தாய்
நாளையின்று நெருநலாயாகா யமாகி
ஞாயிறாய் மதியமாய் நின்ற வெம்பரானைப்
பாளைபடு பைங்கமுகின் சூழலிளந் தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் [பருகிக்
காளைவண்டு பாட மயிலாலும் வளர்சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (4)

செருக்குவாய்ப் பைங்கண் வெள்ளரவரையினானைத்
தேவர்கள் சூளாமணியைச் செங்கண் விடையானை
முருக்குவாய் மலரொக்குந் திருமேனியானை
முன்னிலையாய் முழுதுலகமாய பெருமானை

இருக்குவாய்ந்தணர்க ளெழுபிறப்பு ளெங்கும்
வேள்வியிருந்திரு நிதியம் வழங்கு நகரெங்கும்
கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்கமலி சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (5)

விடையரவக் கொடி யேந்தும் விண்ணவர் தங்கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுதலானும்
அடியிணையுந் திருமுடியுங் காணவரிதாய
சங்கரனைத் தத்துவனைத் தையன்மடவார்கள்
உடையவிழக் குழலவிழக் கோதை குடைந்தாடக்
குங்குமங்க ளுந்திவருங் கொள்ளிடத்தின் கரை
கடைகள் விடுவார் குவளைகளை வாருங் கழனிக் [மேல்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (6)

அருமணியை முத்தினை யானஞ்சு மாடு
மமரர்கடம் பெருமானை யருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பினூற லிருந்தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தரு செம்பொன்
[னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரை
[வாய்க்
கோல் வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின்க
கருமணிகள்போ னீல மலர்கின்ற கழனிக் [ரைமேல்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (7)

இழைதழுவு வெண்ணூலு மேவு திருமார்பி
னீசன்ற னெண்டோள்கள் வீசியெரியாடக்
குழைதழுவு திருக்காதிற் கோளரவ மசைத்துக்
கோவணங்கொள் குழகனைக் குளிர் சடையினானைத்
தழைதழுவு தண்ணிறத்த செங்கெல தனயலே
தடந்தாளமென் கரும்பின்றாழ் கிடங்கினருகே
கழைகழுவித் தேன்றெடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (8)

குனிவினிய கதிர்மதியஞ் சூடு சடையானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்டினங்கள் பாடப்
பனியுதிருஞ் சடையவனைப் பால்வெண்ணீற் றானைப்
பலவுருவுந் தன்னுருவே யாய பெருமானைத்
துனிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநீலங் கண்வளருஞ் சூழ் கிடங்கினருகே
கனிவினிய கதலிவனந் தழுவுபொழற் சோலைக்
காணாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. (9)

தேவியம் பொன்னிமலைக் கோமான்றன் பாவையாகத்
தனதுருவ மொருபாகஞ் சேர்த்துவித்த பெருமான்
மேவியவெந் நரகத்தி லழுந்தாமை நமக்கு
மெய்ந் நெறியைத் தான்காட்டும் வேதமுதலானைத்
தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கெண்டை மிளிர்ந்து கயறுள்ளி விளையாட
காவிவாய் வண்டுபல பண் செய்யுங் கழினிக்
காணாட்டுமுள்ளூரிற் கண்டு தொழுதேனே. (10)

திரையினாற் கடல் சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியினானைக்
கரையினாற் புனறழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
காணாட்டுமுள்ளூரிற் கண்டு கழறெழுது
உரையினார் மதயானை நாவலாரூர
னுரிமையா லுரை செய்த வொண்டமிழ்கள் வல்லார்
வரையினார் வகைஞால மாண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்.

## திருக்காணாட்டுமுள்ளூர் திருப்பதிகம் 11.

சுவாமி தேவி திருநாமங்கள் — பதஞ்சலிநாதர்,
காணார்குழலி, கோல்வளைக்கையம்மை.

---

திருச்சிற்றம்பலம்.

# முதல் அத்தியாயம்.

## நைமிசாரண்யர் தலம் வினவிய படலம்.

முன் ஒரு காலத்தில் நைமிசாரண்ய வாசிகளான சௌனகாதி மகரிஷிகளும் கைலாச வாசிகளான மகரிஷிகளும் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தை அடைந்து கங்கா ஸ்நானம் செய்து ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ விஸ்வநாதரைத் தெரிசித்து அவ்விடத்திலிருக்கும் முக்தி மண்டபம் என்னும் ஓர் ஸ்தலத்தில் சிவராத்திரி முதலிய சிவபெருமானுக்குரிய விரதங்களை அனுஷ்டித்துக்கொண்டிருக்கும் சமயம், வியாச மகரிஷிக்குச் சிஷ்யராயும் சகல புராணங்களையும் அறிந்தவராயுமுள்ள சூதமகாமுனிவருடைய வரவைக்கண்டு மிக ஆனந்தங்கொண்டு அவரை உபசரித்து ஆசனத்திலிருத்தி வியாச மகரிஷிக்கு முக்கிய சிஷ்யரான சூதமகாமுனிவரே! இதற்கு முன் தங்களால் காசி, காஞ்சி, சிதம்பரம் முதலான ஸ்தலங்களுடைய புராணங்களை எங்களுக்குச் சொல்லும் பொழுது அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் ஓர் ஸ்தலம் நிரம்பவும் சிவபெருமானுக்குப் பிரியமானதென்று அடிக்கடி சொல்லியிருக்கிறீர்கள். அந்த ஸ்தலத்தினுடைய புராணத்தை எங்களுக்கு இச்சமயம் உபதேசம் பண்ணி எங்களை கிருதார்த்தர்களாய்ச் செய்யவேண்டுமென்று பன்முறை அடிபணிந்து பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். அச் சூதமகாமுனிவர் மிகுந்த களிப்புடன் அப் புராணத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஓ சௌனகாதி முனிவர்களே! உங்களுடைய சிவபுண்ணியத்தின் பரிபக்குவத்தை என்னால் என்னவென்று சொல்ல முடியும். அந்த க்ஷேத்திரத்தின்

வைபவத்தை ஆதிசேஷனாலும் சொல்வதரிது. ஆயினும் எனக்கு தெரிந்தவரையில் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இச்சரித்திரம் முன் ஒருகாலத்தில் சுமந்து என்னும் முனிவர் தேவ சர்மா என்னும் அரசனுக்குச் சொல்லியிருக்கிறார். சகல தீர்த்தங்களுக்கும் நதிகளுக்கும் உத்தமமானதும், ஸ்நானம் பண்ணின மாத்திரத்தில் சர்வ ஆன்மாக்களின் பாவங்களைப் போக்கி, சர்வா பீஷ்டங்களையுமளிக்க வல்லதாயுள்ள காவிரியென்னும் பெயருள்ள நதி ஒன்றிருக்கிறது. அந்த நதியில் தட்சண காவேரி என்றும் உத்தர காவேரி என்றும் இருவகைப் பேதமுண்டு.

அவைகளுள் தட்சண காவேரி தீரத்தில் திருவையாறு முதலிய பற்பல சிவஸ்தலங்கள் இருக்கின்றன. உத்தர காவேரி தீரத்தில் பல சிவஸ்தலங்களுக்கு நடுநாயகமாகவும், பிர்மா, விஷ்ணு, முதலிய தேவர்களாலும் பதஞ்சலி வியாக்ரபாதர், ஜைமினி, உபமன்யு, முதலான முனிவர்களாலும், வேதவிதிப்படி வழுவாமல் தில்லை வாழந்தணர்கள் முதலானவர்களாலும், பிரதிதினமும், ஆறு காலங்களிலும் பூஜிக்கப்படுகின்றவராயும், தன்னைத் தெரிசித்த மாத்திரத்தில் பக்தர்களுடைய அபீஷ்டங்களை அளிக்க வல்லவராயுமிருக்கிற ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குகந்த நடனவிலாசத்திற்கு மிகவும் பிரியமுள்ளதாயும், சிதம்பரம், வியாக்கிரபுரம், பிர்மபுரம், ஹேமசபாநாதபுரம், தில்லைவனம் முதலான பற்பல திருநாமங்களோடு கூடின புண்டரீகபுரமென்னும் சிதம்பரதலத்தில் முன் ஒரு காலத்தில், கோதாவரி தீரத்திலிருந்து வந்த, ஒரு பிராமணர் வெகுகாலம் ஸ்ரீ நடராஜரை உபாசித்து சர்வசித்திகளையும் அடைந்தார்.

# இரண்டாம் அத்தியாயம்.

## நந்திதேவர் பதஞ்சலிக்கு தல விசேஷம் உரைத்த படலம்.

மறுபடியும் சௌனகாதி முனிவர்கள் சூதமகா முனிவரைப் பார்த்து அப்பிராமணர் யார்? அவருடைய பெயர் என்ன? அவர் கோத்திரம் என்ன? அவர் சுவாமியைக் குறித்து எந்த விதமான உபாசனைகள் செய்தார்? எவ்விதமான சித்திகளை எங்கே அடைந்தார் எனக் கேட்க, முன் தேவ சர்மாவுக்கு சுமந்து முனிவர் சொல்லிய பிரகாரம் சூதமகாரிஷி பின் வருமாறு விஸ்தாரமாகச் சொல்லத் தொடங்கினர்.

முன்னொருகாலத்திலே கோதாவரி என்னும் நதி தீரத்தில் பைடீனஸம் என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ வத்ஸகோத்திரத்தில் உண்டானவராயும் பதஞ்சலி என்னும் பெயருடையவராயும் ஓர் பிராமணர் இருந்தார். அவர் இளமைப் பருவத்தில் வேத வேதாகமங்களைக் கற்றுணர்ந்து கிரகஸ்தாச்ரமத்தில் யக்ஞம் முதலான தர்மங்களை அனுஷ்டித்து முடித்து, பிறகு இல்லற போகங்களில் பற்றற்றவராய் அவ்விடமே மோட்சத்தை அடைய விரும்பி, சிவபெருமானைக் குறித்து வெகு காலம் தவம் புரிந்துகொண்டிருந்தார்.

இப்படி நிகழும் காலத்தில் அவரது தவத்திற்கிரங்கிய சிவபெருமானது அருளால் ஓர் ஆகாயவாணி ஓப்பிராமணா உத்திரகாவேரி தீரத்திலுள்ள சிதம்பரம் என்னும் தலத்தை அடைந்து அங்கே என்னை பூஜிப்பாயானால் உனது இஷ்டம் நிறைவேறுமென்று சொல்லிற்று. அது கேட்ட பிராமணர் தாமதிக்காமல் அச் சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து ஓர் ஆசிரமம் வகித்து பிரதிதினமும் ஸ்ரீ நடராஜப்பெருமானைப்

பூஜித்துக்கொண்டு வாசம் செய்து கொண்டிருக்கும் காலத்து, இவரது புண்ணியத்தின் பரிபக்குவ காரணம் பற்றி ஸ்ரீ நந்திதேவர் இவர் முன் தோன்றி யாது காரணம்பற்றி இங்ஙனம் தவம்புரிகின்றாய், என்று வினவ அவரைக்கண்டு வணங்கி நான் மோட்சத்தை அடைய விரும்பி சிவபெருமானைக் குறித்து தவம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் அது எப்போது எனக்கு சித்திக்கும் என்று வினவ, அவ்வினாவுக்கு நந்திதேவர் நீ, சிதம்பரக்ஷேத்திரத்தின் நிருதி மூலையில் ஒரு யோஜனை தூரத்தில் கொள்ளிடம் என்னும் காரணப் பெயர் பெற்றுள்ள உத்திர காவேரியின் வடபுரம் எல்லையில் சிவபெருமானுக்கு மிகுந்த பிரியமுள்ளதாய் சர்வ பாபங்களைப்போக்கவல்லதாய், சர்வ புண்ணியப்பிர்தமாய், அந்த க்ஷேத்திரத்தை நினைத்தமாத்திரம், தெரிசித்தமாத்திரம், வசித்தமாத்திரம், சாரூப பதவியை அளிக்க வல்லதாய், பிர்மகத்தி, கோகத்தி, முதலான பஞ்சமா பாதகங்களை, க்ஷணகாலம் வசித்த மாத்திரம் போக்கடிக்க வல்லதாய், சூரியன் முதலான நவக்கிரகங்களுடைய தூர்ஸ்தான, தூர்திரீட்சண, தூர்க்கமன முதலானதுகளால் ஆன்மாக்களுக்கு உண்டாகும் பீடைகளைப் போக்கவல்லதாய், பசுவாதிகளுக்கும் முக்தியின்பத்தைக் கொடுக்கக்கூடியதாய், தேவர்களாலும், முனிவர்களாலும், அசுரர்களாலும், மற்றும் ஏனையோர்களாலும் அடிக்கடி தங்கள் இஷ்ட போகங்களை விரும்பி வசிக்கக்கூடியதாயுமுள்ள அதிர்ஷ்டமிர்த்திகா (காநட்டுமுள்ளூர்) என்னும் ஓர் தலம் இருக்கிறது. அந்த தலத்தை அடைந்து சிவபெருமானைக் குறித்து தபசு செய்வாயானால் உனது இஷ்டம் நிறைவேறும். இஃது சிவபெருமானது ஆக்ஞை என்று சொல்லி அம்முனிவரால் அங்கீகாரத்தோடு கூடின அநேக உபசாரங்களைத் தரப்பெற்று மறைந்தருளினர்.

## மூன்றும் அத்தியாயம்.

### பதஞ்சலி முனிவர் முக்தியடைந்த படலம்.

இவ்விதம் நந்தி தேவர் அருள்புரிந்து மறைந்த வுடன் மிகுந்த பேரவாவோடு கனகசபையில் நடனம் புரியும் ஸ்ரீ சபாநாயகரைப் பன் முறை வணங்கித் துதித்து, அனுக்ஞை பெற்று பதஞ்சலி முனிவர் சிதம்பரம் விட்டு சிவனடியை மறவாதவராய் சிவ நாமத்தை ஜெபித்துக்கொண்டு உத்திர காவேரியின் தீரத்தில் ஜெண்பகம், புரசு, மா, தென்னை, நெல்லி, இல்லம், பாக்கு, கதம்பம், அரசு, விளா, பாதிரி, அசோகம், வில்வம், தமாலம், சந்தனம், குரவகம், கதலி, இலுப்பை முதலான பல விருக்ஷங்களடர்ந் துள்ளதும், நாணுவிதமான மிருக ஜாதிகளுக்கு உறை விடமானதும், நாணுவிதமான பட்சிகளின் இனிய குரல் களால் ஆனந்தத்தை விளைவிக்கக்கூடியதும், மதூக வனம் என்னும் காரணப் பெயர் பெற்றுள்ளதுமான அந்த அதிர்ஷ்டமிர்த்திகா (காணுட்டு மூள்ளூர்) க்ஷேத் திரத்தை அடைந்து சஞ்சரிக்குங்காலம் அநேக முனிவர் கள், தேவர்கள், விருத்திரகணங்கள், துவாதசாதித்தர் கள், அஷ்டவசுக்கள், அஷ்டதிக்குப்பாலகர்கள், நவக் கிரகங்கள், நட்சத்திர, தின, யாம, முகூர்த்த, நாடி, கால, லவ, ருது, வார, பட்ச, மாஸ, அயன, விஷு, வருஷயுக, மன்மந்தர, கல்ப்ப, பிரளய, முதலான அந்தந்த காலாபிமான தேவதைகள், தங்கடங்கள் இஷ்ட சித்திகளை அடைய விரும்பி தபசு செய்துகொண்டிருக் கும் ஆசிரமங்களைக் கண்டு ஆனந்தமடைந்தவராய் நிற்கும் சமயம் அதன் தென்றிசையில்வற்ரு நீர்ப்பெருக் குடையதாயும், ஜலசரங்களால் மிகவும் அழகுடைய தாயும் ஸ்படிகத்துக் கொப்பான தெளிந்த நீருடைய தாயும் ஹம்சம் முதலான சகலவிதபட்சி ஜாதிகளுக்கு

சதா வாசஸ்தானமான இரு கரைகளையுடையதாயும் வசிஷ்டர் முதலான பிர்ம ரிஷிகள் நித்தியஸ்நான ஜெப, யக்ஞ ஸ்வாத்தியாய, ப்ரவசன, வேதாந்த, ஸ்ரவண போதன, யோகத்தியான, சமாதி முதலான நற்கருமாக்களை யனுஷ்டித்து வருவதினால் மிகப்பெருமைவாய்ந்த தாயும் முன்னம் ஒரு காலத்தில் பரமபதியான சிவ பெருமான் தில்லையில் காளியோடு வாது நடனம் புரியுங் காலம் அவரது திருப்பாதத்துளணிந்துள்ள( நூபுரம்) சதங்கை அவருடைய நடன வேகத்தினால் தெறித்து இந்நதியில் வீழ்ந்தமையால், ஸ்ரீ நூபுரநதி என்று பெயர் பெற்றதாயுமுள்ள உத்திர காவேரியென்னும் இவ்ய நதியைக் கண்டார்.

அவ்விடமே தனக்கோர் ஆஸ்ரமம் நிருமித்துக் கொண்டு, விபூதிருத்ராட்சதாரியாய் அந்நதியில் பிரதி தினமும், மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்து, அந்தந்த காலத்திற்குரிய தியானம், ஜெபம், முதலியவைகளைச் செய்தும், வேனீற்காலத்தில் பஞ்சாக்னி மத்தியிலும், கார்காலத்தில் நதி மத்தியத்திலும் இருந்து அனஸனவிரதம் (உண்ணாவிரதம்) என்கிற நியமத்தை அனுஷ்டித்துக்கொண்டும், மானாபிமானத்தை விட்டவராய், சலிக்காத மனமுடையவராய் ஆசையற்றவராய் இந்திரியங்களைச்செயித்தவராய், நிந்தை, ஸ்துதி, இவைகளில் சமத்துவமுடையவராய் வெளியான வியாபகங்களை விலக்கினவராய் உள்ளும் புறம்பும் மௌனமான நிலையுள்ளவராய் தன் கண்ணுக்குப் புலப்படுவன யாவற்றையும் சிவசொரூபமாகவே கருதினவராய் எப்பொழுதும் தனது மனதில் சிவபெருமானையே தியானித்து வேத முதலான நூல்களில் புகழ்ந்து கூறப்பட்டுள்ள ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி ஜெபித்துக்கொண்டும், அதன் அங்கங்களை அனுஷ்டித்துக் கொண்டும் சிவபெருமானிடத்து நீங்காத அன்புடையவராய் கடுமையான தவத்தைச் செய்து வந்தார்.

இவ்விதம் தபசு செய்து கொண்டிருக்குங்காலம் உமாதேவியோடு ரிஷபவாகனரூடராய் பிரமதகணங்கள், தேவர்கள், முனிவர்கள் முதலானவர்கள் புடைசூழ சிவபெருமான் அவர் முன் தோன்றினார். அவ்விதம் சிவபெருமானைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் பெருக, ரோமாஞ்சம் சிலிர்ப்ப, கற்கதத்துடன் பன்முறை பிரதட்சணம் செய்து வணங்கி சிவபெருமானிடத்து பதிந்த மனதுடையவராய் மௌனியாய் நிற்குந்தருணம், சிவபெருமான் பதஞ்சலிமுனிவரை நோக்கி, அப்பா பதஞ்சலீ உனது தவத்திற்கிரங்கினோம். யாது காரணம் பற்றி இக்கடுந்தவம் புரிகின்றாய் வேண்டும் வரங்களைக் கேள் தருவோம் என்று அருள்புரிய, அதைக்கேட்டு ஆனந்தங்கொண்டு அநேகவிதமான துதிகளால் துதித்து பன்முறை தாள் பணிந்து கைகட்டி வாய்பொத்தி பயபக்தியுடன் ஏ லோகேஸ்வரா, ஏ மகாதேவா ஏ தேவதேவா எனக்கு எவ்விதவுருவோடு என் முன் தோன்றினீர்களோ அவ்வித உருவத்தோடு இந்த ஸ்தலத்தில் எப்பொழுதும் அம்பிகையோடும் மற்றுமுள்ள கணங்களோடும் வீற்றிருந்து தம்மிடத்து அன்பு பூண்டொழுகும் பக்தர்களுடைய இஷ்ட போகங்களை அளித்து ஸ்ரீ பதஞ்சலீஸ்வரர் என்னும் திருநாமம் கொண்டு பிரகாசித்துக்கொண்டிருக்க வேண்டுவதுடன் எனக்கும் கைவல்லிய பதத்தைக் கொடுத்தருள வேண்டுமென்றும் பிரார்த்தித்தார். பகவானும் அப்பிரார்த்தனைக்கிரங்கி திருவருள் புரிந்து உனது இஷ்டப்படியே ஆகட்டுமென்று சொல்லி அப்பதஞ்சலி முனிவர் மற்றுமுள்ள தேவர்கள் முதலானோர் பார்க்கும் பொழுதே கொஞ்சம் வெளுத்த வர்ணமாயும், கொஞ்சம் கறுத்த வர்ணமாயும் கொஞ்சம் பொன்னிறமாயும், அதிகப் பெரிதில்லாததாயும், அதிக சிறிதில்லாததாயும், கொஞ்சம் நீண்ட சிரோபாகத்தையுடையதாயும், மும்மடிப்பையுடையதாயும், சடையோடு கூடினதாயும், சோபையோடு

கூடினவராயும், அம்பிகையின் ஆலிங்கன சின்னங்களை யுடையதாயும் உள்ள ஜோதிர்மயமான லிங்க உருவுடன் ஓர்பக்கல் பிரகாசித்தும், மற்றோர் பக்கத்தில் மந்த புத்தி யுள்ளவர்களை அனுக்கிரகிக்கவேண்டி, சிவந்த சரீர காந்தியுடையவராயும் திரிசூலம், கதை, குடாரம், அபயம் இவகளைத் தரித்த நான்கு கைகளுடனும் நாக கங்கணங்களை அணிந்தவராயும் சிரஸசக்கரம், ஜடாமகுடம் முதலியவையோடு கூடியவராயும் பாதுகையை அணிந்த திருப்பாதங்களை யுடையவராயு முள்ள திருவுருவங் கொண்டும் பிரகாசித்து நின்றூர். அம்மாதிரியே ஸ்வாமியின் வாமபாகத்தில் அமிர்த கலசத்தைத் திருக்கரத்திலேந்திய வண்ணம் ஓர் உருவங்கொண்டும் கிளியைத் திருக்கரத்திலேந்திய ஓர் உருவங்கொண்டும் முறையே அம்புசாட்சி, விசாலாட்சி என்னும் திருநாமங்களை யுடையதாய் அம்பிகையும் பிரகாசித்து நின்றூர்.

அவற்றைக்கண்டு பதஞ்சலி முனிவர், பரமானந்த மடைந்தவராய் தேவ தச்சனுகிய விஸ்வகர்மாவைக் கொண்டு புதிதான ஆலயம், வீதி முதலானவைகளோடு சூர்யபுஷ்கரணி என்னும் தீர்த்தத்தின் கரையில் கட்டுவித்து, இரதம், வாகனம், முதலானவைகளையும் செய்வித்து வேதாகமமுறை வழுவாமல், நித்யபூஜை உற்சவம் முதலானவைகளைத் தேவர்கள், முனிவர்கள், யாவரும் கண்டு களிக்க நடத்தி, பற்பல முனிவர்களோடு கூட, ஸ்ரீ அம்புஜாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வர சுவாமியை பூஜித்து வந்து இறுதியில் நித்தியானந்த பெரும்பேறு பெற்றூர். அது முதற்கொண்டு ஸ்வாமிக்குப் பதஞ்சலீஸ்வரர் என்ற காரணப்பெயருமாயிற்று.

## 4-வது அத்தியாயம்.

### அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரம் என்னும் பெயர் பெற்ற படலம்.

மேலும் நைமிசாரண்யவாசிகள் சூதமகாமுனிவரை நோக்கி அந்த க்ஷேத்திரத்திற்கு அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென பெயர் வாய்ந்ததின் காரணத்தை எங்களுக்குச் சொல்லவேண்டுமென வணங்கிக் கேட்க இதன் விபரம் முன்னே சுமந்துமுனிவர் தேவசர்மா என்னும் அரசனுக்குச் சொல்லியிருக்கிருர் அதையும் உங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லுகிறேன் என்று சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினுர்.

தண்டகாரண்ய வாசிகளான முனிவர்கள் தங்கள் தங்கள் இஷ்ட சித்திகளை அடைய விரும்பி சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ நடராஜப்பெருமானை சேவித்து நிற்கும் தருணம் ஸ்ரீ நந்திதேவர் அவர்கள் முன்னே தோன்றி உங்களது இஷ்ட சித்திகளை அதி சீக்கிரத்தில் தரவல்லது மதூகவனம். அஃது இந்த க்ஷேத்திரத்தின் நிருதிமூலையில் ஒரு யோஜனை தூரத் தில் உத்தரகாவேரியின் வடகரையில் உள்ளது.

அம்மதூகவனத்தை அடைந்து உங்கள் இஷ்ட சித்திகளை அடையுமாறு உங்களுக்கு சிவாக்ஞை அளிக் கப்பட்டிருக்கிறது என்று சொல்ல, தண்டகாரண்ய வாசிகள் நந்திதேவருடைய மொழிகளை சிரமேற் கொண்டு ஸ்ரீ சபாநாயகரை வணங்கித்துதித்து நந்தி தேவரிடம் விடைபெற்று அம்மதூகவனத்தை அடைந்து அவ்விடமுள்ள பதஞ்சலி முதலான முனி வர்களையும் ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ் வர ஸ்வாமியையும் கண்டு ஆனந்தபரவசர்களாகி,

அவ்விடமே தங்கள் தங்கள் இஷ்ட சித்திகளை அடைய வேண்டி ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை நோக்கி நீண்டகாலம் தபம் செய்துகொண்டு இருந்தார்கள்.

அவர்கள் தவத்திற்கு இரங்கிய பரமன் அவர்களுக்கு அருள்செய்ய திருவுளங்கொண்டு அத்தலம் பூராவாக ஒரு காலடி வைக்கக்கூட இடமில்லாமல் எல்லா இடங்களிலும் தமது லிங்க வடிவங்களாக தோன்றும்படி காண்பித்தார்.

அதுகண்ட அம்முனிவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு ஒவ்வொரு லிங்கமூர்த்தியையும் அர்ச்சித்து இஷ்டசித்திகளை அடைந்தார்கள்.

அத்தலத்தில் எல்லா இடங்களிலேயும் மிர்த் (மண்) இல்லாமல் லிங்கவடிவங்களாக இருந்தபடியால் அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரம் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று.

நிற்க முன்னொருகாலம் இவ்விதமே ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தினின்று பற்பல முனிவர்கள் எல்லா க்ஷேத்திரங்களிலுமுள்ள பரமனை தரிசித்துக்கொண்டு வரும் காலம் இந்த க்ஷேத்திரத்தை அடைந்த மாத்திரம் இவ்விடத்திலுள்ள அதி அற்புதங்களைக்கண்டு ஆச்சர்யமடைந்து சந்தோஷசித்தர்களாகி கொஞ்சகாலம் இத்தலத்தில் வசிக்க எண்ணி தங்களது க்ஷேத்திரமூர்த்தியான ஸ்ரீ விஸ்வநாதரை தியானம்செய்யி அம்மூர்த்தியின் லிங்கவடிவையும் அம்பிகையின் உருவத்தையும் இவ்விடத்திலே தோன்றக்கண்டு ஆனந்தபரவசர்களாகி அர்ச்சித்து இஷ்டசித்திகளைப் பெற்றார்கள். அதுமுதற்கொண்டு ஸ்ரீ விசாலாக்ஷிசமேத ஸ்ரீ விஸ்வநாத

ரும் இந்த க்ஷேத்திரத்திலேயே விளங்கி நின்று பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகின்றார்.

பின்னும் விஸ்வாமித்திரர், ஜாபாலி, வசிஷ்டர், சம்புபக்தர், சதாநந்தர், அத்திரி முதலான ரிஷிகளும், இக்ஷ்வாகு, திலீபன், சகரன், பிருது, உக்ரவீர்யன், மகாவீர்யன், சதாநந்தன், பிரபாகரன், முதலான அரசர்களும், மற்றும்பல யோகிகளும் இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வர சாமியை வணங்கி பூஜித்து தங்களது மனோபீஷ்டங்களை அடைந்தார்கள்.

---

## சுநந்தன், நந்தன் இவர்கள் சரித்திரம்.

---

முன்னொருகாலத்தில் காஷ்மீரதேசத்தில் சூத்திர ஜாதியில் பிறந்த பத்ரன் என்னும் ஒருவனுக்கு சுநந்தன், நந்தன் என இருகுமாரர்கள் இருந்தார்கள். அவ்விருவரும் பலத்திலும், வித்தையிலும், அழகிலும், சம்பத்திலும் சிரேஷ்டர்களாயிருந்தார்கள்.

ஆனால் அவர்களுடைய பூர்வஜன்ம வினையினால் மதுபான முதலான துர்நடத்தை உள்ளவர்களாய் இருந்து வந்ததோடுங்கூட மாதா பிதாக்களையும் சம்ரக்ஷிக்காமல் இம்சை செய்துவந்தார்கள். மாதா பிதாக்கள் இருவரும் பிள்ளைகளின் கொடுமையை பொருக்க மாட்டாதவர்களாய் துர்மரணம் அடைந்தார்கள்.

சுநந்தன் நந்தன் ஆகிய இருவரும் அவர்கள் செய்துவந்த பாவச்செய்கைகளின் பலனாய், தங்களுடைய சொத்துக்களை இழக்கநேரிட்டதுமன்னியில்,

அவ்விருவர்களுடைய பத்தினிமார்கள் நால்வரையும் இழக்கும்படி நேர்ந்தது.

அவ்விருவர்களும் தங்கள் சொத்துக்களை இழந்தது மன்னியில் பத்தினிமார்களையும் இழந்ததுபற்றி, தங்கள் தேசத்தில் வசிக்க மனமில்லாதவர்களாய் வெளி புறப்பட்டு அநேக நாடுகள் காடுகளில் வேடுவர்களைப் போல் சஞ்சாரம் செய்துகொண்டு காட்டுவழியாக வரும் ஜனங்களின் சொத்துக்களை கொள்ளை அடித்து கொடும் தொழில் செய்து ஜீவித்துவந்தார்கள்.

இப்படியாக சிலகாலம் சென்றபின் இவர்களுடைய பூர்வஜன்ம ஏகதேச சுகிர்த விசேஷத்தினால் வழிநடையாக வரும்பொழுது அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரம் என்னும் இத்தலத்தை அடைந்தார்கள். அடைந்த மாத்திரத்தில் அவர்களுக்கு நல்லறிவு தோன்றிற்று. நாம் இவ்வளவுகாலம் கொடும் தொழில் செய்து நமது ஜன்மாவை வீணாக்கிவிண்டோம், என்னும் நல்லறிவு இவ்விடத்தில் வந்தமாத்திரம் நமக்கு தோன்றியதின் காரணம் தெரியவில்லையே என்று நந்தன் சுநந்தனைக் கேட்டான். சுனந்தன் அதன்காரணம் இன்னதென் பதை இந்த மதூக்வனத்திலுள்ள மகான்களைக்கேட்டு தெரிந்துகொள்வோம் என்று சொல்லிக்கொண்டு இருவரும் அவ்விடமுள்ள மகான்களிடம் சென்று தங்கள் விர்த்தாந்தங்களைச் சொல்லிக்கேட்டார்கள்.

அதற்கு அம்மகான்கள் உங்களுடைய செய்கைகள் அதிககொடுமையாக இருந்தபோதிலும் இந்த க்ஷேத்திரத்தை அடைந்தமாத்திரம் உங்களது தீவினைகள் நீங்கி நல்வினையின் பயனாய் நல்லறிவு உண்டாயிற்று. இதற்கு காரணம் இத்தலத்தை நீங்கள் அடைந்ததே யாகும். உங்களுடைய அனுபவத்தினாலே இத்தலத்தின் மகிமையை நீங்கள் அறிந்துகொள்ளலாம் என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டமாத்திரத்தில் அவர்கள் இருவரும் மிகுந்த ஆனந்தமடைந்து தங்களிடமிருந்த திரவியங்கள் எல்லாவற்றையும் அவ்விடமுள்ள பிராமணர்களுக்கே தானம்செய்து வெகுகாலம் அந்த க்ஷேத்திரத்திலேயே வசித்துக்கொண்டு ஸ்ரீ அம்புசாக்ஷிசமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரஸ்வாமியை தரிசித்துக்கொண்டிருந்து இறுதியில் முக்தி அடைந்தார்கள்.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

## தீர்த்தங்களின் மகிமை உரைத்த படலம்.

---

**பி**ன்னும் நைமிசாரண்யவாசிகள் சூதமகாமுனிவரை வணங்கி தாங்கள் அதிர்டமிர்திக்கா க்ஷேத்திர மகிமை உரைக்கக் கேட்டோம். இன்னும் அத்தலத்திலுள்ள தீர்த்தங்கள் அவற்றின் விசேஷங்கள் முதலியவற்றைக் கேட்க மிகுந்த ஆசையுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆகையால் அவைகளைப்பற்றி கேட்கிறோம் என்று சொல்லி, அந்த ஸ்தலத்திலுள்ள தீர்த்தங்கள் எத்தனை, அவைகளில் முக்கியமான தீர்த்தங்கள் எத்தனை, அவைகளிலும் மிக சிரேஷ்டமான தீர்த்தங்கள் எவை, அவைகளில் முக்கியமாய் ஸ்நானம் செய்ய வேண்டிய புண்ணியகாலங்கள், அப்படிப்பட்ட காலங்களில் ஸ்நானம்செய்வதினுல் அடையக்கூடிய பலன்கள், அத்தீர்த்தக்கரைகளில் முக்கியமாய் செய்யவேண்டிய தான தர்மங்கள், அவைகளினுல் அடையக்கூடிய விசேஷ பலன்கள், ஆகிய இவைகளையும் எங்களுக்கு தெளிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்க, சூதமகாமுனிவர் நைமிசாரண்யவாசிகளைப் பார்த்து நீங்கள் கேட்ட விஷயங்களைப்பற்றி, பூர்வம் சுமந்துமுனிவர்

தேவ சர்மா என்னும் அரசனுக்குச் சொல்லிய பிரகாரம் நான் விஸ்தாரமாகச் சொல்லுகிறேன் மிகுந்த சிரத்தை யோடு கேளுங்கள் என்று சொல்லத்தொடங்கினர்.

நைமிசாரண்யவாசிகளே! அதிர்ஷ்டமிர்த்திகா என்னும் க்ஷேத்திரத்தில் ஆயிரத்தெட்டு தீர்த்தங்கள் உள்ளன. அவைகளுள் முக்கியமான தீர்த்தங்கள் நூற்றெட்டு. அவைகளுள் விசேஷமானது அறுபத்தாறு. அவற்றுள்ளும் அதிக சிரேஷ்டமானது ஆறு. அவைகளின் பெயர் முதலானவைகளைச் சொல்லுகிறேன்.

## தீர்த்தங்களின் பெயர்.

1. ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமி திருக்கோவிலின் எதிரிலுள்ளது சூர்யபுஷ்கரணி தீர்த்தம்.
2. இத்தீர்த்தத்தின் நேர்கிழக்கே கூப்பிடுதூரத்திலுள்ளது காமதீர்த்தம்.
3. திருக்கோவிலின் தென்திசையிலுள்ளது விஷ்ணு தீர்த்தம்.
4. இத் தீர்த்தத்திற்கு மேற்கு திசையிலுள்ளது பார்வதி தீர்த்தம்.
5. இத் தீர்த்தத்திற்கு மேற்கு திசையிலுள்ளது இந்திர தீர்த்தம்.
6. ஸ்வாமியின் ஆலயத்திற்கு வடதிசையில் விநாயகருடைய துதிக்கையினால் நிர்மாணம் செய்யப்பட்டது கணதீப தீர்த்தம்.

இவ்வாறு தீர்த்தங்களுள்ளும் அதிசிரேஷ்டமான சூர்ய புஷ்கரணி என்னும் தீர்த்தத்தின் உற்பத்தி,

மகிமை, முதலியவைகளைப்பற்றி இறுதியில் விஸ்தாரமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லி மற்றுமுள்ள விசேஷ தீர்த்தங்களின் மகிமைகள், ஸ்நான பலன்கள், இவைகளைப்பற்றி சொல்லத் தொடங்கினர்.

நைமிசாரண்ய வாசிகளே : காம தீர்த்தத்தில் ஐப்பசி மாதம் அஸ்வனி நட்சத்திரத்தோடு பௌர்ணமி திதியும் கூடிய சுப தினத்தில், அருணோதய காலத்தில் பூமண்டலத்திலுள்ள கங்கை முதலான சர்வ தீர்த்தங்களும் வந்தடைகின்றன. அந்த விசேஷ காலத்தில், எவன் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிருனே அவன் அநேக தடவை கங்காஸ்நானம் செய்த பலனை அடைகிருன். ஸ்நானம் செய்த பிறகு அத்தீர்த்தக்கரையில் தட்சணையோடு கூடின வஸ்திர தானம் செய்பவன், சர்வாபீஷ்டங்களையும் அடைகிருன்.

**விஷ்ணு தீர்த்தம் :** இத்தீர்த்தத்தில் வைகாசி மாதம் ஸ்வாதி அல்லது விசாக நட்சத்திரம் பௌர்ணமி திதியும் கூடின தினத்தில் ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய் கிழமை இந்த தினங்களிலும் முற்கூறப்பட்ட சகல தீர்த்தங்களும் இந்த விஷ்ணு தீர்த்தத்தை வந்தடைகின்றன. இந்த தினங்களில் எவன் ஸ்நானம் செய்கிருனே அவன், ராஜசூய யாகம் செய்தவன் அடையும் பலனை அடைகிருன். (ராஜசூய யாக பலன் தேவேந்திர பதவி) அந்நாட்களிலே அத்தீர்த்தக்கரையிலே கோ தானம் செய்கிறவன் சர்வ பாபங்களினின்றும் விடுபட்டு விஷ்ணு பதத்தை அடைகின்றுன். முக்கியமாய் அத்தீர்த்தக்ரையில் அன்ன தானத்தைச் செய்கிறவன் இந்த ஜென்மத்திலேயே விசேஷ பலன்களை அடைகிருன்.

**பார்வதி தீர்த்தம் :** இந்த தீர்த்தத்தில் மாசி மாதம் சுக்ல பட்சச்சதுர்த்தசி, மக நட்சத்திரம் கூடிய சுபதினத்திலும் அந்த மாதத்தில் ஞாயிறு, திங்கள்,

இந்த வாரங்களில் மாத்யான்னகாலங்களில் முற்கூறப்பட்ட சர்வ தீர்த்தங்களும் இந்தப் பார்வதி தீர்த்தத்தில் வந்தடைகின்றன. அக்காலங்களில் தன் பிதுர்க்களை உத்தேசித்து எவன் ஸ்நானம்செய்கிறானோ அவனுடைய சப்தகுல பிதுர்க்களும் இவனுடைய ஸ்நான புண்ய பதத்தினால் கைலாசத்தை அடைகிறார்கள். ஸ்நானம் செய்தவனும் கைலாசத்தை அடைகிறான். அத்தீர்த்தக் கரையில் தட்சணைகளோடு கூடிய பூமிதானத்தை பிராமணர்களுக்கு எவன் செய்கிறானோ அவனும், எவன் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வர சுவாமியை தெரிசிக்கிறானோ அவனும் சூத, மாகத, வந்திகளினாலே (ஸ்துதி பாடகர்கள்) புகழப்பெற்று எப்பொழுதும் கைலாசத்தில் வசிக்கிறான். மறுபடியும் தாயின் பாலைக் குடிக்கிறதில்லை. அதாவது பிறவித்துன்பத்தை ஒழித்தவனாகின்றான்.

**இந்திர தீர்த்தம்:** இத்தீர்த்தத்தில் ஆனி, ஆடி, மாதங்களில் உத்திர நட்சத்திரம் கூடிய சுக்ல பட்சப் பஞ்சமி திதியில் முற்கூறியபடி சர்வ தீர்த்தங்களும் வந்தடைகின்றன. அக்காலங்களில் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவனும், அத்தீர்த்தக்கரையில் நின்றபடியே சிவபெருமானைத் தியானிக்கிறவனும், பஞ்சாட்சர மந்திரங்களை விதிப்படி ஜெபிப்பவனும், வெண்கலம் முதலான லோகங்களினால் செய்யப்பட்ட பாத்திரங்களை தானம் செய்கிறவனும், இந்த ஜன்மத்திலேயே இஷ்ட காமியார்த்தங்களை அடைந்து மோட்சமடைகிறான்.

**கணாதிப தீர்த்தம்:** இந்த தீர்த்தத்தில் ஆவணி மாதத்திலாவது, புரட்டாசி மாதத்திலாவது ரோகணி அல்லது திருவாதிரை நட்சத்திரத்தில் கிருஷ்ண பட்சம் அஷ்டமி திதியோடு கூடிய தினத்தில், விடியற்காலத்

திலும் அம் மாதங்களில் ஞாயிற்றுக்கிழமைகள், திங்கட் கிழமைகள் விதி பாதம் முதலான காலங்களிலும் முற் கூறியபடி சர்வ தீர்த்தங்களும் வந்தடைகின்றன. அக் காலங்களில் இத்தீர்த்தத்தில் எவன் ஸ்நானம் செய் கிருனே, அவன்பிர்மஹத்தி, கோஹத்தி, சிசுஹத்தி முதலான பாபங்களினின்றும் விடுபடுவதுடன் இறுதி யில் விநாயகருடைய திருவருட்பிரகாசத்தினுல் கைலாச பதவியையும் அடைகிருன். எவன் வஸ்திராபரணங் களோடு கூடின கன்னிகையை அத்தீர்த்தக்கரையில் பிராமணனுக்கு கன்னிகாதானம் செய்கிருனே செய்விக் கிருனே, அவன் இந்த ஜென்மத்தில் இஷ்டபோகங் களை அனுபவிக்கிருன்.

சூர்ய புஷ்கரணி: இத்தீர்த்தத்தில் கார்த்திகை மாதம் பானுவாரங்கள், மாசி மாதம் பானுவாரங்கள், சோமவாரங்கள் இவைகளிலேயும், அம்மாதம் அமா வாசையில் அருணோதய காலத்திலும், திருவோண நட்சத்திரம் கூடிய தினத்திலும், பிரதிமாதம் ஏற்படும் சங்கிரமண காலம், விஷுவம், அயனம், விதிப்பாதம், பௌர்ணமி, அமாவாசை, சூர்ய, சந்திர கிரஹண புண்ணியகாலங்கள் இன்னும் மற்றுமுள்ள புண்ணிய காலங்கள் ஆகிய இவைகளில் இப்பூமண்டலத்திலுள்ள அறுபத்தாறுகோடி புண்ணியதீர்த்தங்களும் இத்தீர்த் தத்தை வந்தடைகின்றன. அக்காலங்களில் முதலில் வேறு குளத்தில் நீராடி பரிசுத்தனாய் இத்தீர்த்தத்திற்கு ரிஷியான பிர்மதேவரையும், தேவதையான சூர்யனையும், பரிபாலகர்களான பிராமணர்களையும், விருட்சமான அரசுவையும், மூர்த்தியான ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வர சுவாமியையும் முதலில் வணங்கி இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவன் அத்தீர்த்தக் கரையிலுள்ள அரசமரத்தடியிலிருந்து சிவபெருமானைத் தியானித்து ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை விதிப்படி ஜெபிக்கின்கிறவன் பசு, விருஷபம், கன்னிகை, ஸ்வர்ணம்

மற்றுமுள்ள லோகங்கள், திலம் முதலான நவதான்யங்கள், வஸ்திரம், பட்டு கம்பளங்கள், தயிர், பால், பழங்கள், தாம்பூலம், பாயஸம், அன்னம், பூமி முதலானவைகளை தங்கள் தங்கள் சக்திக்குரியவாறு பலத்தை விரும்பியோ, பலத்தை விரும்பாமலோ, சங்கல்பித்து பிராமணர்களுக்கு தானம் செய்கிறவன் ஆகிய இவர்கள், அவரவர்கள் நினைத்த பலனையும் சிவபெருமானது சாயுச்சிய முத்தியையும் அடைகிறார்கள். மேலும் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதினால் பரஸ்திரீயை அபகரித்தல், துர்த்தானம் வாங்குதல், சிவபக்தியில்லாமை, நிரீஸ்வரவாதம், மது மாமிசங்களைச் சாப்பிடுதல், புருஷன் இல்லாப்பெண்டிரையும், அன்னியஜாதி ஸ்திரீயையும் புணர்தல், தீர்த்தங்களையும், க்ஷேத்திரங்களையும் நிந்தித்தல், பிராமணர்களுடைய சொத்துக்களை அபகரித்தல், மனுஷ்யனைத்துதித்தல், தங்கள் தங்கள் வருணாச்ரமங்களுக்குகந்த ஆசாரத்தை கைவிடல், குருவை த்வேஷித்தல், ஸ்திரீபுருஷர்களைப்பேதித்தல், பிதாவையும் புத்திரனையும் பிரித்தல், பகலில் ஸ்திரீயோடு கூடுதல், கெட்டயெண்ணத்தோடு இருத்தல், அரசனைச் சேவித்தல், அரசனை இம்சித்தல், யக்ஞம் செய்யாமை, சிவபூஜை செய்யாமை, பிதுர் மாதுரு ஸ்ரார்த்தங்களை கைவிடல், கலகத்தை விளைவித்தல், வேதசாஸ்திரங்களை சொல்லத்தகாதவர்களிடம் சொல்லுதல், சிவபக்தர், விஷ்ணுபக்தர் இவர்களை துவேஷித்தல், துவேஷம் கொள்ளுதல், தான் கற்றவேதங்களை மறந்திருத்தல், பஞ்சயக்ஞங்களைச்செய்யாமை, தபசு செய்பவர்களையும் பிராமணர்களையும் நிந்தித்தல், இன்னும் மற்றுமுள்ள மாபாதகோபபாதகங்களைச்செய்தல் ஆகிய இவைகளுள் எப்பாதகத்தைச் செய்கின்றவர்கள் யாவராயினும் அப்பாபங்களினின்றும் விடுபட்டவராகி பரிசுத்தர்களாகிறார்கள். இக்ஷேத்திரவாசமும், இத்தீர்த்தஸ்நானமும், ஸ்ரீ அம்புசாட்சிசமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருடைய தெரிசனமும் அதிகமான புண்ணியத்தை

செய்தவர்களுக்கன்றி ஏனையோர்களுக்குக் கிடைக்கத் தக்கதன்று. சூர்யபுஷ்கரணிக்கரையில் எவன் தண்ணீர் பந்தல் வைக்கிருனே அவன் அவனுடைய ஏழு ஜென் மாந்திரங்களில் செய்யப்பட்ட பாவங்கள் அதேக்ஷணத் தில் நாசத்தை அடைகின்றன. இத்தீர்த்தத்தில் நாலா பக்கங்களிலேயும் வீடுகளைக்கட்டி எவன் தானம் செய் கிருனே அவன் தேவயோனியிற் பிறக்கிருன். எவன் வீடுகட்டவேண்டிய நிமித்தம் திரவியங்களைப் பிராம ணர்களுக்குத் தானம்செய்கிருனே அவன் குபேரனுக்கு தோழனுகிருன். அத்தீர்த்தக்கரையில் எவன் யாகம் செய்கிருனே அவன் கோடி யாகங்கள் செய்ததினுல் உண்டாகிற பலன்களை அடைகிருன். அத்தீர்த்தக் கரையில் எவன் தன்னுடைய பிதுர்க்களை உத்தேசித்து இரண்யரூபமாகவோ, ஆமரூபமாகவோ, அன்னரூப மாகவோ ஸ்ரார்த்தம் செய்கிருனே அவனுடைய இருபத்தியேழுதலைமுறைகளிலுள்ள சர்வபிதுர்க்களும் சந்தோஷத்தோடு கூடியவர்களாய் ஸ்வர்க்கத்தில் வசிக் கிருர்கள். இத்தீர்த்தத்தை எவன் தூஷிக்கிருனே அவனுடைய ஏழு ஜென்மங்களில் செய்த புண்ணியங் கள் நசித்துவிடுகின்றன. வாதரோகம், குஷ்டம், மண்டைநோய், நேத்திரநோய், மூத்திரக்கிரிச்சரம், நீரடைப்பு, கண்டரோகம், கர்ணரோகம், பாதரோகம், நகப்புண், மூக்குநோய், மாரி, விஷூசி, ஜிர்ம்பணம் (எப்போதும் கொட்டாவிவிடுதல்) முதலான ரோகங்களை உடையவர்கள் பக்தியுடன் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பஞ்சாட்சரமந்திரத்தை முறைப்படி ஜெபித்து ஸ்ரீ அம்புசாட்சிசமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமியை தெரிசனம் பண்ணி பிராமணர்களுக்கு தங்களால் லியன்ற பொருள்களை தானம் செய்வார்களேயானுல் மேற்சொன்ன ரோகங்களினின்றும் விடுபட்டு தங்கள் தங்கள் இஷ்டபோகங்களை அடைகிருர்கள் என்பது திண்ணம். சித்திரைமாதத்தில் சுக்லபட்ச பஞ்சமிதிதி கூடிய தினத்தில் எவன் ஸ்நானம் செய்கிருனே அவன்

விஜயக்ஷமா என்னும் மகாரோகத்தினின்றும் நிவர்த்திக்கப்படுகிறான்.

இத்தீர்த்தத்தில் ஒருதடவை ஸ்நானம் செய்வதினாலேயே சர்வதீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணின பலன்களை அடைவார்கள். இதனாலேயே இத்தீர்த்தத்தின் பெருமை எத்தகைமையுடையதாயிருக்குமென்று அறிந்துகொள்ளவேண்டும்.

---

## ஆறுவது அத்தியாயம்.

---

### சூர்யபுஷ்கரணி உற்பத்தி உரைத்த படலம்.

நைமிசாரண்யவர்சிகளைப் பார்த்து சூதமஹாமுனிவர் கூறியதாவது: முன்னம் சமஸ்த தர்மங்களை அறிந்தவராயும், சர்வ பிராணிகளிடத்தும் தயவோடு கூடினவராயுமுள்ள, சுமந்துமுனிவரைப்பார்த்து தேவசர்மா என்னும் அரசன், சூர்யபுஷ்கரணிதீர்த்தம் எக்காலத்தில் யாரால் எதற்காக உண்டாக்கப்பட்டது என்னும் விஷயத்தைக்கேட்க அவர் அவ்வரசனுக்கு சொல்லியவாறே சூர்யபுஷ்கரணி தீர்த்தத்தின் உற்பத்தி முதலிய விஷயங்களை விஸ்தாரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சொல்லத்தொடங்கினார்.

முன் ஒரு காலத்தில் பிர்மலோகத்தில் வீற்றிருக்கும் பிர்மாவை மிகுந்த வணக்கத்துடன் சூரியன் நமஸ்கரித்து ஓ ஸ்வாமி ஜெகத்தை பிரகாசிக்கவேண்டி உம்

மால் பிரேரணை செய்யப்பட்டவனும், உமது ஆணைப் படி நடக்கிறவனுமுள்ள என்னை மந்தேகாள் என்னும் ராட்சதாள் பிரதிதினமும் எனது உதயகாலத்தில் ரத சஞ்சாரமார்க்கத்தைத்தகைந்து என்னை ஹிம்சைசெய்து வருகிறார்கள். ஆகையால் அதை நீக்கும்பொருட்டு எப்போதும் எனது மண்டலத்தில் ஈஸ்வரனும், மகா விஷ்ணுவும், வசித்திருக்க அருள்புரியவேண்டுமென்று பிரார்த்தித்தார். இதுகேட்ட பிர்மதேவர் கொஞ்சம் சிரித்தமுகத்துடன் அப்பா சூர்யனே! உன்னுடைய மண்டலத்தில் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்று அவ்விருவர்களையும் பிரேரணைசெய்ய நாம் தகுந்தவ னல்ல. உனக்கு இச்சையிருக்குமானால் உத்திரகாவேரி தீர்த்தத்தின்கரையிலுள்ள சர்வசித்திகரமான அதிர்ஷ்ட மிர்த்திகா க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ அம்பு சாட்சிசமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமியை தெரிசித்து அவருடைய சன்னதியிலிருக்கும் நான்கு வேதசொரூப மான அரசமரத்தடியிலிருந்து நிராகாரனாய் தபசு பண்ணுவாயானால் உனது இஷ்டம் நிறைவேறுமென்று சொல்லி விடைகொடுத்தனுப்பினார். அவ்விடையைப் பெற்றுக்கொண்ட சூர்யன் நானாதேசங்களையும் கடந்து உத்திரகாவேரி தீர்த்தத்தையடைந்து ஸ்நானம்பண்ணி, அதன் கரையிலுள்ள அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்தி ரத்தை அடைந்து, ஸ்ரீ அம்புசாட்சிசமேத ஸ்ரீ பதஞ் சலீஸ்வர சுவாமியைத் தெரிசித்து, சன்னிதானத்தி லுள்ள அரசமரத்தினடியிலிருந்து, சிவபெருமானையும், மகாவிஷ்ணுவையுங் குறித்து கடுந்தவம் புரியலாயினார்.

இவர் தவத்தின் அக்னியினால் உலகங்கள் அக் காலத்தில் தவித்ததுகள். அதைக்காக்க எண்ணியும், இவருடைய தபசுக்கு இரங்கியும் சிவபெருமான் தமது வாகனமாகிய ரிடபத்தில் உமாதேவி சமேதராயும், மகாவிஷ்ணு தமது கெருடவாகனத்தில் ஸ்ரீ தேவி, பூதேவிசமேதராயும், இவருக்குமுன் தோன்றினார்கள்.

அதுகண்ட சூர்யன் அதிக சந்தோஷத்தோடும், அதிக பயபக்தியோடும் ஜெயவாத பூர்வகமான துதிகளால் துதித்து பன்முறை நமஸ்கரித்து நின்றனன்.

அதுகண்ட சிவபெருமான் மிகுந்த தயவுடன் அப்பா சூர்யா! யாதுகாரணம்பற்றி இவ்விதம் பிரபஞ்சத்தைத் தகிக்கக்கூடிய கடுமையான தவத்தைச் செய்கிறாய். வேண்டும் வரங்களைக்கேள் தருவோம் என்று சொல்ல, அதுகேட்ட சூர்யன் சர்வக்ஞராயும், சர்வத்துக்கும் ஆதாரபூதாளாயும், இருக்கப்பட்ட தங்களுக்கு நான் சொல்லவேண்டியதொன்றுமில்லை. ஆயினும் பிரதிதினமும் ராட்சதர்களால் எனக்கு உண்டாகும் இம்சையை நிவர்த்திக்கும் பொருட்டு நீங்களிருவர்களும் எனது மண்டலத்தில் சதா வசிக்கவேண்டும். பிரதிதினமும் அருணோதயவேளையில் பிராமணர்கள் ஸ்நானம்செய்து அர்க்கதானத்தோடு காயத்ரிமந்திரத்தை உங்களிருவர்களிடத்தும் பக்தியோடுகூட ஜெபிக்கவேண்டும். அவர்களுடைய ஜெபப்பிரபாவத்தினாலேயும், உங்கள் இருவருடைய அனுக்கிரகத்தினாலேயும், என்னை எதிர்க்கிற அந்த ராட்சதர்கள் அபஜெயத்தை அடைந்தவர்களாக வேண்டும். அதனால் அந்த ராட்சதர்களுடைய உபத்திரவத்தினின்றும் நீக்கப்பட்டவனாகி பிரகாசிக்கும்படி அருள்புரியவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வண்ணமே யாகட்டுமென்று திருவாய்மலர்ந்தருளி மகாவிஷ்ணுவுடன் மறைந்தருளினார்.

இவ்வரங்களைப் பெற்றுக்கொண்ட சூர்யன் மிகுந்த சந்தோஷத்துடன் ஸ்ரீ அம்புசாட்சிசமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்யவேண்டி தனது கையிலுள்ள கதையினால் பூமியை ஓர் அடி அடித்தான். அதேக்ஷணத்தில் அப்பூமியினின்றும் ஸ்படிக நிறம் போன்ற சுத்தமாய்த்

தெளிந்த நீரையுடைய ஓர் தடாகம் உண்டாயிற்று. அத்தீர்த்தத்தினுல் அபிஷேகம் செய்து, ஆராதனை முதலான சகல உபசாரங்களையும் பக்தியுடன் செய்து முடித்தான். அதனுல் சந்தோஷமடைந்த சிவபெருமான் எனது ஆலயத்தின் பூர்வம் அதாவது கிழக்குப் பாகத்திலுள்ள இத்தீர்த்தம் உன்னுடைய பெயரோடு கூடினதாய் சூர்யபுஷ்கரணி என்னும் திருநாமங் கொண்டு விளங்கட்டும். இதில் பக்தியோடு முறைப்படி ஸ்நானம் செய்யும் ஆன்மாக்களுடைய சர்வ பாபங்களையும், ரோகங்களையும் போக்கக்கூடியதாய் ஆகட்டும். கங்கை முதலான சகல நதிகளும் இதில் எப்போதும் வசிக்கட்டும். ஓ சூர்யா! இத்தீர்த்தத்தில் மாகஸ்நானம் அதாவது மாசிமாதம் மகநட்சத்திரம், சதுர்த்தசி அல்லது பௌர்ணமி திதி கூடியநாள் மிகவும் பலத்தைத் தரத்தக்கது. இந்த க்ஷேத்திரத்தில் வசிக்கின்றவர்கட்கு வேறு தேகத்தை உண்டுபண்ண பிர்மாவுக்கு இப்புவியில் மிர்த் (மண்) கிடைக்காதபடியினுலே இந்த க்ஷேத்திரம் அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென பெயர் பெற்று வழங்கி வருவதாகட்டுமென, இவ்வித வரங்களையும் கொடுத்து சிவபெருமான் மகாவிஷ்ணுவுடன் சூர்ய மண்டலத்தில் தனது ஏக தேகாம்ஸத்தினுல் எல்லாரும் பார்க்கும்பொழுதே பிரவேசித்தார். அதுமுதல் சூர்யன் மிகுந்த பலவானுகி ராட்சதர்களுடைய உபத்திரவத்தினின்றும் நீங்கினவனுகியும், ஜெகப்பிரகாசனுகியும் விளங்கி நின்றுன். ஆகையினுல் அத்தீர்த்தம் சூர்ய புஷ்கரணியென்றும் பெயர் பெறலாயிற்று. அத்தீர்த்தத்தின் மகிமையைச் சொல்வதற்கு எவர்கள் தான் திறமையுடையவர்கள். ஹே! ராஜேந்திரா! இன்னும் ஓர் சரித்திரம் சொல்லுகிறேன் கேள் என்று சொல்லத்தொடங்கினுர்.

ஒருகாலத்தில் எல்லா ரிஷிகளும் ஓர் கூட்டமாக இந்த க்ஷேத்திரத்தையடைந்து உத்திர காவேரியிலும் சூர்யபுஷ்கரணியிலும் ஸ்நானம்செய்து பிரதிதினமும்

ஸ்ரீ பதஞ்சலீஸ்வாருடைய சன்னிதானத்தில் விளங்கா நின்ற மண்டப ரூபமான சபையிலிருந்து சிலர் ஸ்தோத்திரம் செய்கிறவர்களாகவும், சிலர் சிவபூஜை செய்கின்றவர்களாகவும், சிலர் தியானம் செய்பவர்களாகவும், சிலர் பஞ்சாட்சர மந்திரங்களை ஜெபிப்பவர்களாகவும், சிலர் யோக சமாதியை அனுபவிக்கின்றவர்களாகவும், தங்கள் தங்கள் பக்திமார்க்கங்களை அனுஷ்டித்து வந்தார்கள்.

இப்படிப் பலகாலம் நடந்துவருகையில் ஓர்நாள் இவர்களுடைய பக்திமார்க்கங்களுக்கு இரங்கிய சிவபெருமான் ரிஷபத்துவஜத்தினலே விளங்குகின்ற நவரத்ன மயமான விமானத்தில் அம்பிகையுடன் ஏறிக்கொண்டும், கையில் குடாரம், த்ரிசூலம், டமருகம், ஹரிணம் முதலானவைகளைத் தரித்துக்கொண்டும், கிரீட குண்டல முதலான நவரத்ன பூஷணங்களினலேயும் மேல் பூசப்பட்டிருக்கும் பரிமள கந்தத்தினலேயும் தான் உடுத்தியிருக்கும் ஸ்வர்ணமயமாயிருக்கும் வஸ்திரங்களினலேயும் மந்தாரம், கல்பகம், பாரிஜாதம் முதலான தேவலோக புஷ்பங்களினலேயும், நாலாபக்கங்களிலும் பிரகாசிக்கும்படி செய்கின்றவராயும், அம்மகரிஷீஸ்வரர்களுடைய கூட்டத்தின்முன் தோன்றினர்.

அத்தருணம், அவ்விருடிகள் யாவரும் மிகுந்த சந்தோஷத்தோடு கூடினவர்களாய், அவ்விமானத்தினடுவில் வீற்றிருக்கும் சிவபெருமானது கோடி சூர்யப்பிரகாசமான திருவுருவைக்கண்டு, மிருத்தியுஞ்சாதி மந்திரங்களினலேயும், சதருத்ரங்களினலேயும், இன்னும் பற்பல வேதமந்தரங்களினலேயும் துதித்து, பன்முறை தாள்பணிந்து, பரமனது திருநோக்கால் தங்கள் தங்களிஷ்டசித்திகளைப் பெற்றனர்கள். அதுவுமன்றி இம்மண்டபரூபமான சபையில் இதே பிரகாரம் பக்தகோடிகள் எல்லோருக்கும் இஷ்டசித்திகளையளிக்கும் பொருட்டும் எங்களுக்கு அருள்புரிந்தவாறே அருள்புரியவேண்டும்

பொருட்டும், இந்த ரூபத்தோடு உமாதேவிசமேதராய் எப்பொழுதும் வீற்றிருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

அதுகேட்ட பரமன் ஓ முனிவர்களே! உங்களிஷ்டப்படியேயாகட்டும். எந்தக்காரணத்தினுல் என்னை இவ்விடத்தில் தெரிசித்தீர்களோ, அதேகாரணத்தினுல் உங்களுக்கு இனி மறுபிரவியுமில்லை. எவர்கள் ஆனி மாதத்தில் உத்திரநட்சத்திரம் கூடிய தினத்திலும், மார்கழிமாதம் திருவாதிரைநட்சத்திரம் பௌர்ணிமை திதி கூடிய தினத்திலும் என்னை தெரிசிக்கிறுர்களோ அவர்கள் சர்வ பாபத்தினின்றும் விடுபட்டவராய், தேவர்களாலேயும் அடைய முடியாததான நமது பதத்தை அடைகிறுர்கள் என்று சொல்லி, அவ்விடத்திலேயே உமாதேவியாரோடுகூட விளங்கி நின்றுர். அதுமுதற்கொண்டு ஓ மகாராஜாவே! பிராணிகளுக்கு இஷ்டசித்திகளைக்கொடுக்க அம்மண்டபரூபமான சபையானது மிகவும் சமர்த்தமாயிற்று.

ஆகையால் அம்மண்டபத்திலிருந்து எவன் பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபம் செய்கின்றுனே, தியானம் செய்கின்றுனே, பரமசிவனை பூஜிக்கின்றுனே, அவன் மிகவும் பரிசுத்தனுவதுடன் இஷ்ட சித்திகளையும் உடனே அடைகிறுன் என்பதைப்பற்றி விசாரிக்க வேண்டியது என்ன இருக்கிறது. சூர்யபுஷ்கரணி தீர்த்த ஸ்நானமும், ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமியினுடைய பூஜையும், அச்சபா நாதருடைய தெரிசனமும், சொற்ப புண்ணியங்களையுடையவர்களால் அடையத்தக்கதன்று. ஓ அரசே! க்ஷேத்ரம், மூர்த்தி, தீர்த்தம் இவைகளுடைய மகாத்மியம் என்னுல் எப்படி என் குருவினிடத்து கேட்கப்பட்டதோ, அப்பிரகாரமே உங்களுக்கு சொன்னேன்.

---

# ஏழாவது அத்தியாயம்.

## சூர்யபுஷ்கரணி தீர்த்த மகாத்மியத்தைக் கேட்டதனல் தங்கள் பிதுர் சாபத்தினல் பைசாசரூபமடைந்துள்ள அதர்மா, அசாந்தன் என்னும் இருவர்களின் சாபம் நீங்கு படலம்.

ஓ நைமிசாரண்ய வாசிகளே சூரிய புஷ்கரணியின் மகிமையை இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள். முன் சுமந்து முனிவர் தேவ சர்மாவுக்குச் சொல்லிய வாறு சொல்லுகிறேன் என்று சொல்லி சூதமகாமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

திரேதாயுகத்தில் ஒரு கிராமத்தில் வேத வேதாங் கங்களை கற்றுணர்ந்தவராயும் சத்தியசந்தராயும் கௌண் டின்னிய கோத்திரத்தில் உற்பவித்தவராயும் நன் னடக்கையுள்ளவராயும் சுதர்மா என்னும் பெயருடைய வராயும் உள்ள ஓர் அந்தணர் இருந்தார். அவருக்கு சில நாட்கழிந்த பிறகு அதர்மா என்றும் அசாந்தன் என்றும் இரு புதல்வர்கள் ஜனித்தனர்.

அவ்விருவர்களும் சுதர்மங்களை விட்டு பிறரை தூஷிக்கிறதும், எப்பொழுதும் பாவங்களையே செய் கிறதுமாக இருந்தபடியால் அப்புதல்வர்களின் நட வடிக்கைகளினலே ஓர் சமயம் மிகுந்த கோபத்தோடு கூடின சுதர்மாவானவர், அவ்விரு புதல்வர்களையும் பார்த்து நீங்கள் இருவரும் பிசாசாகப் பிறக்கக்கடவீர் கள் என்று சபித்தார். அது கேட்ட அவ்விருவரும் பிதாவைப் பணிந்து, எங்களது செய்கையைப் பொறுத் தருளி இச்சாபத்திற்கு ஓர் முடிவான காலத்தை நிய மனம் செய்து மறுபடியும் நன்னடக்கைகளில் நின்று

இருதார்த்தர்களாக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதுகேட்ட பிதாவாகிய சுதர்மாவானவர் மனமிரங்கி அவ்விருவர்களையும் நோக்கி அகஸ்திய முனிவருடைய சிஷ்யரான எனது பெயர்கொண்ட சுதர்மா என்னும் முனிவருக்கும் ஓர் வேடனுக்கும் உண்டாகும் சம்பாஷணை ரூபமான ஓர் உபாக்கியானத்தை எப்பொழுது கேட்கிறீர்களோ அப்பொழுது இந்தச்சாபம் நீங்குமென்றும் என்னை மறுபடியும் நீங்கள் வந்து அடைவீர்களென்றும் சாப நிவர்த்தி கொடுத்தார்.

இவ்விதம் அவ்விருவர்களும் தங்கள் பிதாவின் புண்ணிய வசத்தினால் அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் காஞட்டுமுள்ளூரில் சூர்ய புஷ்கரணி தீர்த்தக் கரையிலுள்ள ஓர் ஆலமரத்தில் பிசாசு ரூபங்களாக வசித்து வந்தார்கள். அக்காலத்தில் குடன் என்று பெயருள்ள ஓர் வேடுவன் இருந்தான். அவன் கொடுமையான புத்தியை உடையவன். எப்பொழுதும் அவ்வனத்தில் வில்லையும் அம்புகளையும் கையிலேந்தி மிருகங்களையும் பக்ஷிகளையும் அடித்துப் புசிப்பதல்லாமல் அவ்வழியில் சஞ்சரிக்கும் பிராமணர் முதலானவர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் இம்சித்து அவர்களிடமுள்ள பொருள்களை அபகரித்தும் இன்னும் அநேகவிதமான பாவங்களைச் செய்தும் ஆசாரமில்லாதவனும் அதிக கோபத்தோடுங் கூடினவனுகவும் இருந்தான்.

அப்படி இருக்குங் காலத்தில் விந்திய பர்வதம், வில்வலன், வாதாபி என்கிற அசுரர்கள், சமுத்திரம், இவர்களின் செருக்கை அடக்கினவராயும் சிவபெருமான் தனது திருக்கல்யாண காலத்தில் தென்திசை உயர்ந்து வடதிசை தாழ்ந்து இருக்கும் தருணம் அதைக்கண்டு பயந்த சகல பிராணிகளையும் காக்கவெண்ணி இவ்விடத்

தில் இருக்கின்றவர்களுக்குள்ளே நீ தான் எனக்கு ஒப்பானவன். நீ தென்திசை சென்று இப்புவியை சம மாக்கக் கடவாய் என்று சொல்லக்கேட்டு, நினது கல்யாண வைபவத்தைக்காண வந்தவர்களுக்குள் நான் தானு திருக்கல்யாண தரிசனம் செய்ய அவ்வளவு புண்ணியம் செய்யாதவனென்று மனதில் வியாகூலத்தை அடைந்த அம்முனிவருக்கு களிப்புண்டாகும்படி நாம் இக்கோலத்தைத் தென்திசையிலும் உனக்கு இருப்பிட மாகிய பொதியமலையில் காண்பிக்கிரும் என்று ஆசீர்வாத வசனத்துடன் தக்ஷிண தேசத்துக்கு அனுப்பப்பட்டவராயும், ஸ்ரீ குமரக்கடவுளிடத்து தென்மொழியின் இலக்கணத்தையும், சிவஞானபோதம் என்னும் ஞான நூலையும் கற்றுணர்ந்தவராயும், தவ சிரேஷ்டராயும் தமது கமண்டலுவில் அடக்கிவைத் திருந்த காவிரியை பூமியில் பெருகும்படி செய்ய, அக் கமண்டலுவை தேவேந்திரனது வேண்டுகோளால் காக உருக்கொண்டு கவிழ்த்துச்சாய்த்த விநாயகக் கடவுளின் அனுக்கிரகம் பெற்றவராயும் உள்ள அகஸ்தியமா முனிவர் தமது சிஷ்யர்களோடு காவேரி தீர்த்தக்கரையி லுள்ள திருவானைக்கா, ஸ்ரீரங்கம் முதலிய பற்பல சிவ க்ஷேத்திரங்களையும், விஷ்ணு க்ஷேத்திரங்களையும் தெரி சித்துக்கொண்டு உத்தரகாவேரி தீர்த்தக்கரையின் வழி யாக சிதம்பரம் ஸ்ரீ சபாநாதனை தரிசிக்கவேண்டி வரும் வழியில் உத்தரகாவேரியின் வடகரையிலுள்ள அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் இம்மதூக வனத்தை அடைந்தார்.

அவ்வனத்தின் நடுவில் அமைந்துள்ள பற்பல விருக்ஷங்களுடைய அழகைக்கண்டு கொஞ்சநேரம் தனது வழிநடந்த சிரமத்தைத்தீர்த்துக்கொள்ள உத்தே சித்து அவ்விடத்திலுள்ள ஓர் ஆலமரத்தடியில் சில நேரம் இருந்த காலையில் நான்கு திக்குகளிலேயும் காணப்பட்ட பற்பல புஷ்பங்களையும், வில்வங்களையும்

சிவபெருமானுக்கு அர்ப்பணம்செய்யவெண்ணி, தனது சிஷ்யர்களுள் புத்திமானுன சுதர்மா என்பவரை அப் புஷ்பங்களைக்கொண்டுவர ஏவி, தான் ஸ்நானம் செய்ய உத்தரகாவேரியை அடைந்தார்.

அச் சுதர்மாவானவர் குருவின் ஆணையை சிரமேற் கொண்டு ஆசாரத்துடன் புஷ்பக்கூடையைக் கையி லேந்தி ஒவ்வொரு விருக்ஷங்களிலேயும் செடிகளிலேயும் உள்ள வாசனை நிறம்பிய பற்பல புஷ்பங்களையும் தோஷ மில்லாத பில்வதளங்களையும் கொய்துவருகின்றதருணம் முன்கூறிய துஷ்ட வேடுவனுன குடன் என்பவனைக் கண்டார். கண்டமாத்திரத்தில் அவ்வேடுவனும் இம் முனிவரைக்கண்டு இவரைக்கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் மிகுந்த வேகமாக இவரை நெருங்கி ஓடிவந்தான்.

அதுகண்டதும் இவர் ரொம்பவும் பயத்துடன் ரோதனம் (அழுகை) செய்துகொண்டு பற்பல இடங் களில் ஓடி ஒளிந்தார். எவ்விடம் சென்றாலும் அவனும் இவரைப் பின்பற்றித் தொடர்ந்தான்.

அதுகண்டு மிகவும் பயந்து ஓடிவரும்பொழுது தெய்வாதீனமாய் சூர்யபுஷ்கரணி தீர்த்தத்தில் விழுந் தார். அவனும் இவரைப்பிடிக்க எண்ணி அத்தீர்த்தத் தில் வீழ்ந்தான். வீழ்ந்த மாத்திரத்தில் அவனுக்கு நல் லறிவும், சரீரத்தில் காந்தியும் உண்டாயிற்று. ஓர் திவ் விய புருஷனும் தோன்றினுன்.

அவனைக்கண்டு அச்சுதர்மாவானவர் பயம் நீங்கி ஆச்சர்யத்தோடு கூடினவராய் நீ யார் எவ்விடமிருந்து வந்தாய் என்று அத்தீர்த்த மத்தியிலேயே அவனைக் கேட்க அவன் அதற்கு சுவாமி நான் முந்தி துர் ஆசார முள்ள வேடுவன். உங்களைக்கொல்ல பின்பற்றியவன்,

என்னகாரணத்திஞலேயோ இப்படிப்பட்ட கதியை அடைந்திருக்கின்றேன். தாங்கள் திரிகாலஞானி ஆன திஞல் இதை அறிந்து சொல்லவேண்டுமென்று வேண்டிஞன்.

அதற்கு சுதர்மாவானவர் எனக்கு குருவான அகஸ்தியமாமுனிவர் இவ்விடத்தில் இருக்கிருர். அவரிடம் சென்று கேட்டால் உனது சந்தேகம் நிவர்த்தியடையும் என்று சொல்லி அத்திவ்விய புருஷனுடன் இருவரும் அகஸ்திய முனிவரை நோக்கிச்செல்லும் தருணம் இவரது காலவிளம்பத்தால் (தாமதம்) சந்தேகங்கொண்ட அகத்தியமாமுனிவர் மற்றுமோர் சிஷ்யரை அனுப்பிஞர். அச்சிஷ்யர் சுதர்மாவைத்தேடி இவ்விடம் வந்து இளைப்பாரவேண்டி அங்கோர் ஆலமரத்தடியில் இருக்க சுதர்மாவின் வரவைக்கண்டார். சுதர்மாவானவர் அவரை நெருங்கினசமயம் இவரது பின்னே வரும் அத்திய்விய புருஷனைப்பார்த்து இவன் யார் என்று கேட்டார். அதற்கு அவர் நடந்த விஷயங்களைச் சொல்லி திவ்விய புருஷனை நோக்கி அவரது சந்தேகத்தைக் கேட்டுக்கொள்ளும்படி பிரேரணை செய்தார். அவன் இவர்தானே அகஸ்தியமாமுனிவர் என்று வினவ, இவர் அகத்தியமாமுனிவரல்ல அவருடைய சிஷயர்களில் ஒருவர் இவரும் உனது சந்தேகத்தைத் தெரிவிக்கும் வல்லமை உள்ளவர் என்று சொன்ஞர்.

அதுகேட்ட திவ்விய புருஷன் அவரைப் பன்முறை வணங்கி தன் விருத்தாந்தங்களைச்சொல்லி இவ்விதமான திவ்விய ரூபத்தைத் தற்போது தான் அடைந்ததின் காரணத்தை சொல்லும்படி வேண்டிஞர்.

அதுகேட்ட அம்முனிவர் தனது ஞானதிருஷ்டியின் பலத்திஞல் இவனது பூர்வஜென்ம விருத்தாந்தங்களை நன்ருய் உணர்ந்து சொல்லத்தொடங்கிஞர். அப்பா

திவ்விய புருஷா! நீ பூர்வ ஜென்மாவில் காந்திமான் என்று பெயருள்ள ஓர் தேசத்து அரசனாய் இருந்தாய். அக்காலத்தில் எப்பொழுதும் அசுபங்களைச் செய்கிறதும், குருஹத்தி, மாதுருஹத்தி, ஸ்திரீவதம் முதலான அநேகவித பாவங்களையும் செய்தாய். அக்காரணத்தினால் இச் ஜென்மாவில் வேடனாகப் பிறந்து வனங்களில் சஞ்சரிக்க நேர்ந்தது. அதிலும் வனத்திலுள்ள பக்ஷிகளையும், மிருகங்களையும், வழிப்போக்கர்களான பிராமணர், ஸ்திரீகள், குழந்தைகள் முதலான மற்றுமுள்ள பிராணிகளையும் இம்சித்து வந்தனை. அப்படிப்பட்ட நீ தெய்வாதீனமாக சூரியபுஷ்கரணி தீர்த்தத்தில் எக்காரணத்தினால் நீ மூழ்கினபோதிலும் அத்தீர்த்தத்தின் மகாத்மியத்தினாலே (புண்ணியபிரபாவம்) உன்னுடைய பூர்வ ஜென்மபாவங்கள் உள்பட நீங்கினதுமன்றி இத் திவ்வியதேகத்தையும் அடைந்தாய். நீ அந்தத்தீர்த்தத்தில் வீழ்ந்தகாலம் மாசிமாதம் திருவோண நக்ஷத்திரம் வியதிபாதயோகத்தோடு கூடின அமாவாசியா புண்ணிய காலமானதால் இப்பேறுபெற்றாய்.

ஆகையால் இத்தீர்த்தத்திற்கு ஒப்பான தீர்த்தம் மூன்று லோகங்களிலுங் கிடையாது. இத்தீர்த்தத்தின் பெருமையினாலே உனக்கு இப்படிப்பட்ட சொரூபம் உண்டானது. நாங்கள் இனி காலவிளம்பம் செய்யத் தகாதவர்கள். எங்களது குருவின் சமீபம் போகிறோம் என்று சொல்லி விடைகொடுத்து அனுப்பினார்கள். அத்திவ்விய புருஷனும் அவ்விருவர்களையும் வணங்கி கைலாசப் பேறுபெற்றான்.

பிறகு அச்சுதர்மாவானவர் தமது சகாவோடுகூட அத்தீர்த்தத்தில் விதிமுறை வழுவாமல் ஸ்நானம்பண்ண எத்தனம் செய்யுங் காலத்தில் அவர்கள் தங்கியிருந்த அவ்வாலமரம் திடீரென்று விழுந்தது. விழுந்தவுடன்

அவ்வாலமரத்தினின்றும் இரண்டு புருஷர்கள்தோன்றி ஞர்கள். அவ்விருவர்களையும் சுதர்மாவானவர் பார்த்து நீங்கள் யார் என்று கேட்டார்.

அதற்கு அவ்விருவர்களும் அஞ்சலியுடன் ஏ சுவாமி! நாங்கள் இருவரும் தங்களது திருநாமம்பெற்ற சுதர்மாவென்னும் பிராமணரின் புதல்வர்கள், அதர்மா, அசாந்தன் என்னும் பெயருடையவர்கள். எங்களது கொடுமையான நடத்தைகளைக்கண்டு எங்களது பிதாவான சுதர்மாவானவர் பிசாசங்களாகப் பிறக்கக்கடவீர்களென்று சாபம்கொடுத்தனர். அதுகேட்டுத் துயரடைந்த எங்கள் இருவருடைய பன்முறைவேண்டுகோளால் தங்கள் நாமதேயத்தைச்சொல்லி தங்களால் சம்பாஷணரூபமாக உபதேசிக்கப்படும் ஓர் உபாக்கியானத்தை எப்போது கேட்கிறீர்களோ அப்போது இச்சாபம் நீங்கி யதாரூபமடைந்து எனது சமீபம் வருவீர்களென சாப விமோசனத்தைத் தரப்பெற்ஷேம். எங்கள் பிதாவினுல் சாபம் அடைந்த நாள்முதல் பைசாசரூபங்களைப்பெற்று இவ்வால மரத்தில் வசித்திருந்தோம். தாங்கள் ஓர் திவ்விய புருஷனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்த உபாக்கியானத்தைக் கேட்டமாத்திரம் எங்கள் பிதாவினது வாக்கின்படி சாபவிமோசனம் அடையப்பெற்று யதாரூபத்தை அடைந்தோம். இதுதான் எங்களது விருத்தாந்தம். இனி நாங்கள் எங்கள் பிதாவிடம் செல்லுகிஷேம். அருள்புரியவேண்டுமென்று பிரார்த்தித்து அவ்விருவர்களிடமும் விடைபெற்று தங்களது பிதாவிடம் சென்று நன்னடைக்கைளில் நின்று கிருதார்த்தர்களாயிஞர்கள்.

இதுகண்ட அகஸ்தியமுனிவருடைய சிஷ்யர்களாகிய அவ்விருவரும் சூரியபுஷ்காணி தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் முதலானவைகளை செய்து முடித்து, அத்தீர்த்தத்தின் மகாத்மியத்தைக்கருதியும் சொல்லிக்

கொண்டும் தங்களது குருவாகிய அகஸ்திய முனிவரிடம் சென்று நடந்தவிருத்தாந்தங்கள் யாவற்றையும் சொல்லி அவரை சந்தோஷப்படுத்தினார்கள்.

இத்தீர்த்தத்தின் மகிமையை எவன்கேழ்க்கிறானோ எவன்படிக்கிறானோ அவன் சகல இஷ்டபோகங்களையும் இந்த ஜென்மாவிலேயே அடைந்து இறுதியில் தனது பந்து ஜனங்களோடுகூட சிவலோகப் பெரும்பேறு பெற்று வாழ்வான்.

## எட்டாவது அத்தியாயம்.

சூர்ய புஷ்கரணி தீர்த்த ஸ்நானம், ஸ்ரீ அம்பு சாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரஸ்வாமி தரிசனம், இவைகளின் புண்யப் பிரபாவத்தினால் தருமசீலர் என்ற

### பிராமணர் மகப்பேறு பெற்ற படலம்.

மறுபடியும் அச்சூர்யபுஷ்கரணி தீர்த்தத்தின் பெருமையை சொல்லுகிறேன் என்று அச்சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

முன்னொரு காலத்தில் கண்ணுவ முனிவர் கோத்திரத்தில் பிறந்தவராயும் வேத வேதாங்கங்களைக் கற்றுணர்ந்தவராயும் சர்வ எக்கியங்களாலேயும் நித்திய நைமித்திக விரத பூஜா அனுஷ்டானங்களினாலேயும் சிவபெருமானை வழிபடுகிறவராயும், சத்திய சீலராயும், தனவந்தராயும், பஞ்சாட்சர மந்திரத்தை சதா ஜெபிக்கிறவராயும் உள்ள தருமசீலர் என்ற ஓர் பிராமணர் இருந்தார் அவரது தகப்பனார் எக்கிய சர்மா என்பவர் இவரது பால்யத்திலேயே காலம் சென்றனர். தாயாரும் அனுமிர்த்தியானார் (உடன்கட்டை ஏறுதல்.) இத் தர்ம

சீலரானவர் தனது கிருஷிகளை பரிசீலனை செய்ய எந்தந்தவிடங்களில் செல்லுகிறாரோ அந்தந்தவிடங்களில் அக் கிருஷிகள் மிகுந்த பலத்தை உடையதுகளாயின. அவரது கோக்கள் மிகவும் விருத்தியடைந்தன. அவர் தனது குணத்தினாலேயும் செல்வப்பெருக்கினாலேயும் தேவாளுக்கு ஒப்பானவராக விளங்கினர்.

இவ்விதம் அவர் வாழும் நாளில் தனது ஜென்மாந்திர பாவ வசத்தால் தனது பாரியை நஷ்டமடைய மறுபடியும் விவாகம் பண்ணிக்கொண்டார். அப்பாரியையும் தான் அனுபவிக்கும் காலத்தில் நஷ்டமடைந்தார். இம்மாதிரி நான்கு பாரியைகள் நஷ்டமடைந்த பிறகு ஐந்தாவது தடவை குணவதியாயும், ரூபவதியாயும், தனது பந்து வர்க்கங்களிடத்தில் பிரீதி உள்ளவளாயும், பதிவிரதையாயுமுள்ள பத்மாக்ஷி என்ற ஓர் கன்னிகையை மணந்தனர். அவள் இவருடைய வாக்கியத்திற்கு விரோதமின்றி மிகுந்த பயபக்தியுடன் இவருக்கு வேண்டிய சிஸ்ருஷைகளை செய்து வந்தாள். அவர் இவளோடு சகல தர்மங்களையும் அனுஷ்டித்து வரும் நாளில் ஒரு புதல்வன் பிறந்தனன். அப்புதல்வன் மூன்று வருஷகாலம் உயிருடனிருந்து பின் மரித்தனன். மறுபடி சிலநாள் கழிந்தபின் அவருக்கு ஓர் கன்னிகை உண்டாகி அதுவும் இறந்தது. இதைக்கண்ட அத் தரும சீலர் மிகவும் வருத்தமடைந்து இப்புத்திர தோஷத்தைப் பரிகரிக்க தன் பத்தினியோடு கூட சேதுவையடைந்து, சர்ப்ப சாந்தி முதலிய கர்மாக்களைச் செய்தும், சிவ விஷ்ணு முதலான தர்மங்களை அனுஷ்டித்தும், சிவ புராணாதிகளைக் கேட்டும், தனது ஊரில் வசிக்கும் காலத்தில் அவ்வூரிலுள்ள ஜனங்களின் பரிகாச வசனத்தை, அதாவது இத்தர்ம சீலன் ஆதியில் கொஞ்சநாள் பாரியை இழந்தவராயும், பிறகு புத்திரர்களை இழந்தவராயும் ஆகிறான். இவன் என்ன மனிதன்

என்கிற உலகத்திலுள்ளோர் சொல்லும் வசைமொழி களைக் கேட்டு மனதில் ரொம்ப வருத்தத்துடன், புத்திரப்பேறு இல்லாத எனக்கு இப்பொருள்களினுலே யும், போகங்களினுலேயும் இந்த ஜீவனத்தினுலேயும், என்ன பிரயோஜனம் என்றும், இனி ஐம்பது வயதுக்கு மேல் சென்ற வயதையுடைய எனக்கு புத்திரன் எப்படி உண்டாவான். ஒரு காலமும் உண்டாகமாட்டான். ஆகையால் எனது பார்யையான பத்மாட்சியோடு கூட மகா பிரஸ்தான யாத்திரையைச் செய்கிறேன். எனக்கு எக்காலத்தில் புத்திரன் உண்டாகிருனே அக்காலம் வரையில் செய்கிறேன் என்று சங்கல்பித்து, மதுரமான ஆகாராதிகளை விலக்கி காய் கிழங்குகளை உண்பவராய் அவ்விடத்தில் வசிக்கும் சத்திய சர்மா என்று பெய ருள்ள தனது மித்திரனிடம் சென்று என்னுடைய கிரஹம், கிராமம் முதலிய சொத்துக்களை உன்னிடம் ஒப்புவித்து பத்தினி சகிதம் மகா பிரஸ்தான யாத்திரை செய்ய உத்தேசித்திருக்கிறேன். என் உத்தேசப்படி எனக்குப் புத்திரப்பேறு உண்டானுல் திரும்பி வந்து இச் சொத்துக்களைத் திருப்பி வாங்கிக்கொள்வேன் இல்லாவிடில் இச் சொத்துக்கள் யாவும் உன்னுடையதே என்று சிவபெருமானை சாட்சியாக சபத பூர்வம் அவ ரிடத்தில் ஒப்புவித்து அவரது அனுமதி பெற்று சர்வ பொருள்களையும் திரணம்போல் வெறுத்து தனது கிராமத்தில் நின்றும் வெளிக்கிளம்பினர். இப்பிரகாரம் வெளியில் கிளம்பி யாத்திரை செய்யுங்காலத்தில் 4, 5 திவசங்கள் (நாட்கள்) சென்ற பிறகு வழியில் தெய்வா தீனமாக இவரது பூர்வ புண்ய விசேஷத்தினுலே அகஸ்திய மகா முனிவருடைய சிஷ்யரான குசிகர் என்னும் பெயருள்ள ஓர் முனிவர் சந்தித்தார். அவர் இவரைக்கண்டு இவரது விருத்தாந்தங்களைப்பற்றி விசாரித்தார். இவர் அவரிடம் தனது விருத்தாந்தங்கள் யாவும் ஒளிக்காமல் சொல்லி இவ்விதம் பாரியா நஷ்டம்,

புத்திர தோஷம் உண்டாவதற்கும் காரணம் என்ன? அதை அறிந்து சொல்லவேண்டுமென்று மிகுந்த வணக்கத்துடன் கேட்டார். அதற்கு அவர் தனது ஞான திருஷ்டியால் எல்லாவற்றையும் ஆராய்ந்து பின் வருமாறு சொல்லத் தொடங்கினார்.

ஓ! பிராமணா பூர்வ ஜென்மாவில் நீ காசி க்ஷேத்திரத்தில் சுதிஸ், மிருதி முதலானவைகளை நன்றாய் அறிந்துணர்ந்தவராயும், சாஸ்திரநீதி வழுவாதவராயும் உள்ள ஓர் பிராமணராய் இருந்தாய். அக்காலத்தில் மழையின் கொடுமையால் அவ்வூரிலுள்ள விஸ்வநாதருடைய ஆலயமானது கொஞ்சம் க்ஷீணதிசையடைந்தது. அதைக்கண்டு மிகவும் வருந்தினவனாய் அவ்வூர்களிலேயும் மற்றும் பல ஊர்களிலேயுமுள்ள தனிகர்களிடம் யாசித்த பொருளைக்கொண்டு அவ்வாலயத்தைக் கட்டிவைத்தனை. அக்காரணத்தினாலே இந்த ஜென்மாவில் உனக்கு பூமிகள், தனங்கள், கோக்கள் முதலிய சம்பத்துக்கள் உள்ளவரானாய். இனி பாரியா நஷ்டத்தின் விவரத்தைச் சொல்லுகிறேன் கேள். மற்றும் ஓர் முந்தின ஜென்மத்தில் நீ காஷ்மீரதேசத்தில் ஓர் பிராமணனாய் இருந்தனை. அக்காலம் உனக்கு நல்ல அழகு வாய்ந்தவர்களாயும், நல்ல குணங்களை உடையவர்களாயும் பத்து கன்னிகைகள் உண்டானார்கள். அக்கன்னிகைகளை கன்னியா ஸுல்கம் (பரிசம் வாங்கி பெண்ணைக்கொடுத்தல்) வாங்கிக்கொண்டு கிழவர்களுக்கும், ரோகத்தையுடையவர்களுக்கும் அப் பெண்களுடைய இஷ்டத்துக்கு மாறுபாடாக மணம் செய்வித்தனை. அப் பெண்கள் அப்புருஷர்களோடு சில காலமிருந்தும், சுகமில்லாதவர்களாயும், மற்றும் சிலர் உடன் வைதவ்யத்தை அடைந்தவர்களாயினபடியால், இவ்விதம் தங்களுக்கு ஓர் நாள் நேர்ந்ததே என்று எண்ணி உனக்கு நானாவிதமான சாபங்களைக் கொடுத்து தாங்கள் விஷங்களைத்தின்று துன்மார்க்க மரணமடைந்

தார்கள். அப்பாவத்தினால் இந்த ஜென்மாவில் களத்திர தோஷம் உன்னைப்பற்றியது.

அதே ஜென்மாவிலேயே உனது பத்தாவதான பெண்ணை அலங்கார கன்னிகாதானம் செய்வதாய்ச் சங்கல்பித்து அம்மாதிரியே செய்து பிறகு, அப்பெண்ணை மாத்திரம் அம்மாம்பிள்ளை கிரஹத்திற்கு அனுப்பினை. அதற்கு ஏற்பட்டுள்ள பூஷணம், ஆபரணம், திரவியங்கள், கோக்கள், முதலானவைகளைக் கொடுக்காமல் உனது ஸ்வாதீனத்தில் வைத்திருந்தாய். அப்பாவம் இருந்தாலும் எக்காரணத்தைக்கொண்டாவது கன்னிகாதானம் பண்ணினையோ அதே காரணத்தினால் இந்த ஜென்மாவில் இந்த ஐந்தாவது பத்தினி உனக்கு, இல்லற வாழ்வுக்குரியவளாய் கிடைக்கப் பெற்றாய். ஆபரணம் முதலிய பொருள்களை சங்கல்பித்தபடி கொடுக்காததினால் இந்த ஜென்மாவில் உனக்கு இவ்வளவு காலம் மனோவியாதி உண்டாயிற்று.

புத்திர தோஷத்தைப்பற்றி சொல்லுகிறேன் கேள். முன்னும் அதே ஜென்மாவில் ஸ்ரீ சைலம் என்கிற சிவஸ்தலத்திலேயும், காசியில் கங்கா தீரத்தில் உள்ள ஸ்ரீ விஸ்வநாதருக்காக ஏற்பட்டுள்ள நந்தவனத்திலேயும் உள்ள பழவர்க்கங்கள், உன்னால் திருடப்பெற்றன. அக்காரணத்தினால் இந்த ஜென்மாவில் உனக்குப் புத்திர தோஷம் உண்டாயிற்று. இது தான் உன் பூர்வ ஜென்ம விருத்தாந்தம்.

இனி அப்புத்திர தோஷத்தை நிவர்த்திக்கவும் நல்ல புத்திரனை அடையவும் ஓர் மார்க்கம் சொல்லுகிறேன். என்னுடன் அதிர்ஷ்ட மிர்த்கா க்ஷேத்திரமென்னும் திருக்கானாட்டுமுள்ளூருக்கு வா. உனது புண்ய விசேஷத்தால் தெய்வாதீனமாய் சமீபத்தில்

வருகிற மாசிமீ மக நட்க்ஷத்திரம் கூடிய பௌர்ணமி திதியில் அங்குள்ள பிராமணருடைய அனுக்ஞையை முன்னிட்டுக்கொண்டு அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய். அங்குள்ள பிராமணர்களுக்கு சகலவித தானங்களையும் செய்து, சாப்பாடும் செய்து அவர்களை சந்தோஷப் படுத்துவாயானுல், உனக்கு நீண்டகாலம் ஆயுளோடு கூடினதாயும், அதிக அழகு வாய்ந்ததாயுமுள்ள புத்ரன் உண்டாகும்.

அத்தீர்த்தத்தினுடைய பெருமையானது எனது குருவான அகஸ்தியமா முனிவரிடமிருந்து என்னுல் கேட்கப்பட்டது. இப்போது எனது பூர்வ ஜென்மா வில் வெண்கலம் முதலான லோக பாத்திரங்களைத் திருடினமையினுல் இந்த ஜென்மாவில் நீல குஷ்டம் என்கிற வியாதியினுல் பீடிக்கப்பட்டு அதை நிவர்த்திக்க வேண்டி எனது குருவின் உத்தரவுபடி நானும் அவ் விடம் செல்லுகிறேன். ஆகையால் நீயும் அந்த க்ஷேத்திரத்திற்கு வா என்று அக் குசிக முனிவர் சொன்னுர்.

அதுகேட்ட அத்தரும சீலர் அடங்காப் பேரவாக் கொண்டு தனது பத்தினியான பத்மாட்சியுடனும், அக் குசிக முனிவருடனும், அதிர்ஷ்டமிர்த்கா என்னும் காறுட்டுமுள்ளூர் அடைந்து மாசிமீ மக நட்சத்திரம் கூடிய பௌர்ணமி திதியில் விடியற்காலத்தில் அங் குள்ள பிராமணர்களிடம் அனுக்ஞை பெற்றுக்கொண்டு விநயகரை வணங்கி, அத்தீர்த்தத்தில் விதி முறைப்படி ஸ்நானம் செய்து, ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ் சலீஸ்வரருக்கு பூஜை முதலானவைகளை நடத்தி வஸ்திர தானம் பூதானம் முதலியவைகளுடன் பிராமண போஜனமும் நடத்திவைத்தார். பின்னும் சிலகாலம் அங்கேயே வசித்திருந்தனர். பின்னும் அத்தீர்த்தத்

தின் பிரபாவத்தினாலேயும் ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரின் அருளினாலேயும் நீண்ட ஆயுளோடு கூடினவனாயும், மன்மதனுக்கு ஒப்பானவனாயுமுள்ள ஓர் புதல்வனை அடைந்தார்.

அடைந்த காலத்தில் மிகுந்த சந்தோஷத்துடன் ஜாதகர்மா முதானவைகளை அங்கேயே நடத்தி, ஒரு வருஷம் அவ்வூரில் வசித்து, பிறகு அவ்விடமுள்ளவர்களுடைய அனுமதியைப் பெற்று ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை வணங்கி தனது ஊர் சென்று தன் மித்திரரான சத்திய சர்மாவிடம் ஒப்புவித்திருந்த சொத்துக்களை, தன் ஸ்வாதீனப்படுத்தி வெகு காலம் (நீடூழி) வாழ்ந்திருந்தார்.

அவ்வூரில் உள்ளவர்கள் இவர் தம், வைபவத்தைக் கண்டும், புத்திரனைக் கண்டும் மிகவும் சந்தோஷித்தார்கள். அகஸ்தியரது சிஷ்யரான அக்குசிக முனிவரும் அத்தீர்த்தத்தில் ஸ்நானம், தானம் முதலானவைகளைச் செய்து ரோகத்தினின்றும் விடுபட்டு தனது இருப்பிடம் சென்றனர். ஆகையால் அத்தீர்த்தத்தின் மகாத்மியத்தை என்னவென்று உரைப்பேன். ஏதோ கொஞ்சம் என்னால் சொல்லப்பட்டது. இந்த அத்தியாயத்தை எவன் படிக்கிறானோ, எவன் கேட்கிறானோ, அவன் மிகுந்த எஸஸ் பெற்றவனாக ஆகிறான்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

---

சூர்ய புஷ்கரணி தீர்த்த ஸ்நானம், ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வர சுவாமி தெரிசனம், பிர்மோற்சவம் செய்தால், இவைகளின் புண்ணிய

பிரபாவத்தினுல் தர்மவர்மன் என்னும் அரசன், நாரத மகா ரிஷியின் சாபத்தினுல் தான் அடைந்த வேடரூபம் மாறியது, நரகத்தினின்றும் துன்பமனுபவித்த தனது பிதுர்க்களை சொர்க்கத்துக்கு போகும்படி செய்தது, இறுதியில் தர்மவர்மன் மோட்சமடைந்து மறு ஜென்மத்தில் பூர்வ ஞானத்தோடு கூடினவனுய் சோழ தேசத்தில் ப்ருது கீர்த்தி என்னும் சோழதேச அரசனுய்ப் பிறந்து ராஜரிஷி என்ற பெயர் பெற்று சாயுச்ய பதவியடைந்தது. இவைகள் உரைத்த படலம்.

பின்னும் தேவ சர்மா இந்த அதிர்ஷ்டமிர்த்கா க்ஷேத்திரத்தில் இன்னும் என்னென்ன தானங்கள் செய்யத் தகுந்தவை, என்று விஸ்தாரமாய்ச் சொல்ல வேண்டுமென்று கேட்க, சுமந்து முனிவர் சொல்லத் தொடங்கினுர்,

இந்த அதிர்ஷ்டமிர்த்கா க்ஷேத்திரத்தில் எவன் ஒருவன் நல்லமனதோடு கூட காலையில் எழுந்திருந்து, சௌசம் முதலான காலைக்கடன்களை முடித்து, பரம சிவனை ஹிருதயத்தில் தியானம் பண்ணி அர்க்க புஷ்கரணியில் யதாவிதியோடு ஸ்நானம் பண்ணி, சந்தி முதலானதுகளை முடித்து, பரமசிவனுடைய திருவருட் ப்ரசாதத்தை அடையவேண்டி, ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை முடிந்த வரையில் ஜெபித்து, வேதம் கற்றுணர்ந்த பிராம்ணர்களுக்கு பாயஸத்தோடு நிறைந்த வெண்கலப் பாத்திரத்தை தானம் செய்கிருனே, அவன் இந்த ஜென்மாவில் தேவேந்திரனது போகங்களுக் கொப்பான சுகங்களையனுபவித்து கைலாசம் அடைகிருன். இந்தக்ஷேத்திரத்தில் எவன் வஸ்திர தானம் செய்கிருனே, அவன் அரசனுய்ப் பிறப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. இந்தக்ஷேத்திரத்தில் ஒரு நாளாவது வசித்து, அர்க்க புஷ்கரணி தீர்த்தத்தில்

ஸ்நானம் பண்ணி, பஞ்சாட்சர ஜெபத்துடன், எவன் சிவபெருமானைத் தியானம் பண்ணுகிறானோ, அவனது புண்ணிய பலத்தை, சொல்வதற்கு தேவர்களும் திறமை யற்றவர்கள். பூதானம், அன்னதானம், கோதானம், கிரகதானம், வெள்ளி, தங்கம், சந்தனம், புஷ்பம், தீர்த்த கும்பம், சத்திரம், சாமரம், விசிறி, கம்பளம், சாளக்கிராமம், சிவநாமம், பாண லிங்கம், வாழைப் பழம், மாம்பழம், பலாப்பழம், பாக்கு, தாம்பூலம், தேங்காய் முதலானதுகளும், இன்னும் மற்றுமுள்ளவைகளும், இந்த க்ஷேத்திரத்தில் தானம் செய்யத் தகுந்தவைகள் இதனால் சகல பாவங்களும் நிவர்த்தியாகின்றன. வேறு ஸ்தலங்களில் செய்யும் தானங்கள், வேறு ஜென்மாவில் பலத்தைக்கொடுக்கக் கூடியன. இந்த க்ஷேத்திரத்தில் செய்யக்கூடிய தானங் களோ இந்த ஜென்மாவில் பலன் தரும். ஸ்ரீ அம்பு சாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வாருக்கு எவன் ரதோர்ச் சவத்தைச் செய்கிறானோ, அவன் சகல போகங்களையும் அனுபவித்து முடிவில் கைலாசத்தையடைகிறான். அதற்குத் திருஷ்டாந்தமாக முன்காலத்தில் நடந்ததும், கேட்ட மாத்திரத்தில் பாவத்தை போக்கக்கூடியது மான, ஓர் இதிகாசம் சொல்லுகிறேன் கேள் என்று சொல்லத் தொடங்கினார்.

முன்னம் கிரேதாயுகத்தில் ஓர் காலம் நான்காவது வருணத்தில் பிறந்த வீரவர்மன் என்ற பெயருள்ள ஓர் அரசன் இருந்தான். அவன் பத்தினிகள், புத்திரர்கள், பெண்கள், தனங்கள், இதுகளோடு கூடினவனாக இருந்தபோதிலும், கொஞ்சங்கூட தயவில்லாதவன் தனது குடும்பத்திற்கு ஆகார முதலானவைகளை திருப்தியாக அளிக்காமலும் தானும் அம்மாதிரியாகவே ஆகார முதலானவைகளை திருப்தியாகப் புசிக்காமலும், பிறருக்கு ஒருவிதமான உபகாரங்களைச் செய்யாமலும், பிறரை நிந்திக்கிறவனும் பிறர் திரவியங்களில் ஆசை

யுள்ளவனுகவும் இருந்து வந்தான். இப்படியிருக்குந் தருணம், அவனுக்கு முடிவுகாலம் நெருங்கிற்று. அக் காலத்து மிகவும் பயங்கர ரூபமுடையவர்களாயும், பாசம், தண்டம், இவைகளைத் தரித்தவர்களாயும், மழை காலத்து இருட்டைப்போல் சரீர காந்தியுள்ளவர்களா யுமுள்ள எமகிங்கிரர்கள் அவனது முன் தோன்றி, பிராணனைக் கவர்ந்து பாசக்கயிற்றினுல் கட்டியும், தண்டத்தினுலடித்தும், அதட்டியும் கொண்டு போனுர் கள். பின் தென்றிசைக்கோனுடைய ஆக்ஞையினுலே கும்பீபாகமென்ற பெயருள்ள மிகவும் கொடுமையான நரகத்தில் போட்டார்கள். பிறகு அவனது புத்திரனுன தர்மவர்மன் என்ற பெயருள்ளவன் நல்லொழுக்கத் தோடு கூடினவனுயும், பிதாவினுல் சம்பாதிக்கப்பட்ட தனங்கள் யாவற்றையும் தர்மத்தில் செலவழிக்க எண்ணி பிரதிதினமும் அன்னதானம், வஸ்திரதானம் முதலா னதுகளைச் செய்தும், குளம் கிணறு முதலானவைகளை வெட்டி கட்டுவித்தும், மற்றும் பிறருக்கு, பற்பல உபகாரங்களையும் செய்துகொண்டுமிருந்தான். இப்படி யிருக்குந் தருணம் ஓர் காலம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டி, ஒவ்வொரு க்ஷேத்திரத்தையுமடைந்து, அங் குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம், தானம், முதலானவை களைச் செய்துகொண்டு தெய்வாதீனமாய் ஸ்ரீரங்கம் என்னும் க்ஷேத்திரத்தையடைந்தான். அங்குள்ள காவேரியில் ஸ்நானம், தானம் முதலானவைகளைச் செய்துகொண்டு கொஞ்சகாலம் வசிக்கும் சமயம் தேவ ரிஷியான நாரதர் என்பவரைக் கண்டான். அவரை மிகுந்த வணக்கத்துடன் துதித்து கந்த புஷ்பங்களாலே அவரையர்ச்சித்து, பழம் முதலானவைகளை அவருக்கு அர்ப்பணம் செய்து, சம்சாரபந்தத்தை ஒழிக்க எண்ணி அவருடைய காலில் அடிபணிந்து வீழ்ந்தனன்.

அது கண்ட முனிவர் மிகுந்த சந்தோஷத்தினுல் தன் இரு கரங்களினுலேயும் அவனைத் தூக்கி ஆலிங்

கனம் பண்ணி, அவனை ஓரிடத்திலிருக்கச் செய்து உனது எண்ணத்தை வெளியிடு என்றார். அதற்கவன் மிகுந்த சந்தோஷத்தோடு ஸ்வாமி எனது ஜென்மாவும், எனது புண்ணியங்களும், தங்களது தெரிசனத்தினாலே தான், பரிபக்குவத்தையடைந்தன. சம்சாரபந்தத்தை போக்கடிக்கும் மார்க்கத்தை எனக்குச் சொல்லி அனுக்ர கிக்க வேண்டுமென்று வேண்டினான். ஓ தர்மவர்மனே! உனக்கு இப்போது என்னிடத்தில் மிகவும் பக்தி யிருப்பதால் இச்சம்சாரபந்தத்தை போக்கடிக்க கூடிய தான ஓர் உபாயம் சொல்லுகிறேன் சாவதானமாகக் கேள். உன்னாலே பற்பல தர்மங்கள், தீர்த்த யாத்திரை முதலானவை அனுஷ்டிக்கப்பட்டன. அவைகள் யாவற் றும் சிவபெருமானுக்கு ரதோர்ச்சவத்தை செய்விக்காத வரையில் பலன் தருவன அல்ல. உனது பிதுர்க்கள் கும்பீபாகமென்னும் மிகுந்த கொடிய நரகத்தில் எம தூதர்களாலே போடப்பட்டு மிகவும் கொடுமையான துன்பத்தையனுபவிக்கிறார்கள். அவர்களது உபத்திர வத்தை நிவர்த்தி செய்வதற்காக நீ உத்திரகாவேரியின் தீரத்திலுள்ள அதிர்ஷ்டமிர்த்திகா என்னும் க்ஷேத்திர மாகிய, மதூக வனத்தையடைந்து, அவ்விடத்திலுள்ள தும் கேட்டமாத்திரம் பாவத்தை போக்கடிக்கக்கூடியது மான சூர்ய புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து உனது பிதுர்க்களை உத்தேசித்து ஸ்ரார்த்தம் முதலான வைகளைச் செய்து, அத்தீர்த்தத்தின் மேல் கரையில் பிரகாசிக்கின்றவரான, ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருக்கு கார்த்திகை மாதத்தில் ரதோர்ச் சவத்தை நடத்திவைப்பாயேயானால், உனது பிதுர்க் கள், கைலாசத்தையடைவதுடன், நீயும் இந்த ஜென்மா வில் அனுபவிக்கவேண்டிய போகங்களையனுபவித்து இறுதியில் சம்சாரபந்தத்தை விட்டு அகன்றவனாய் சாயுச்ய பதவியையடைவாய். ஆகையால் உனது பிதுர்க்களின் திருப்தியின் பொருட்டு சீக்கிரம் அம் மதூகவனத்தையடைந்து அவ்வுற்சவத்தை நடத்திவை

யென்றார். அதுகேட்ட தர்ம வர்மன் தெய்வகதியால் உண்டான ஒரு லோப புத்தியால் அவரது வசனத்தை சரியாக அங்கீகரிக்காமலும், பதில் சொல்லாமலும் இருந்தனன். அதுகண்ட அம்முனிவர், மிகவும் கோபங் கொண்டவராயும், சிவந்த கண்களையுடையவராயும், அத் தர்மவர்மனைப் பார்த்து ஏ துராசாரமுள்ளவனே! நீ எனது வாக்கியத்தில் இம் மாதிரி அநாதரவோடு கூடின வனாக இருந்ததால், நீ வேடுவனாக ஆகக்கடவாய் என்று அவனுக்கு சாபம் கொடுத்து அவனை விட்டகன்று தன்னிருப்பிடம் சென்றார். உடனே அத்தர்மவர்மன் வேடுவனாக மாறி மிகவும் அடர்ந்த காட்டையடைந்து துராசாரத்தோடு கூடினவனாய், அக்காட்டிலுள்ள யானை கள், குதிரைகள், பன்றிகள், இவைகளையடித்துப் புசித்துக்கொண்டிருந்தனன்.

இப்படியிருக்குங்காலம், இவனது பூர்வ புண்ணிய விசேஷத்தால், வசிஷ்ட மகரிஷி தனது சிஷ்யர் களோடு கூட காவேரியில் பிராதஸ்நானத்தை முடித்து அவ்வன வழியே வந்தார். அவரைக்கண்டதும், அத் தர்மவர்மனான வேடுவனுக்கு பூர்வ ஞானம் உண்டா யிற்று. அதையடைந்ததும், மனதில் மிகுந்த கவலை யுள்ளவனாய், நாரத முனிவரால் தனக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்க எண்ணி அவ்வசிஷ்ட முனிவரை அணுகி, மிகுந்த பக்தியுடன் வணங்கி, சரணாகத வத்சலரான ஓ முனிவரே! எனக்கு நாரத முனிவரது சாபத்தால் உண்டான வேடுவ ரூபத்தை நீக்கி என்னை ரட்சித்தருளவேண்டுமென்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனன். அதுகேட்ட அம்முனிவர் தயையுள்ள மனதுடன், அவ்வேடுவனைப் பார்த்து பயப்படாதே என்று சொல்லி க்ஷணகாலம் தனது ஞானதிருஷ்டியால் அவனது விருத்தாந்தங்களை ஆராய்ந்து சொல்லத் தொடங்கினர்.

நீ முந்தி நான்காவது வருணத்தில் பிறந்த தர்மவர்மன் என்று பெயருள்ள ஓர் அரசன் சர்வ தானங்களேயும், தீர்த்த யாத்திரையையும் செய்து கொண்டு வருங்காலத்தில், உன்னையும் உன் பிதுர்க்களே யும் ரட்சிக்க வேண்டி உனது வேண்டுகோளால் நாரத முனிவரால் சொல்லப்பட்ட வசனங்களை நிராகரித்த படியால் இம்மாதிரியான வேடுவ ஸ்வரூபத்தையடைந் தாய். ஆயினும் பூர்வ புண்ணியப் பிரபாவத்தால், என்னைக்கண்ட மாத்திரம், உனக்கு பூர்வ ஞானம் உண்டாயிற்று. ஆகையால் நீ தாமதிக்காமல் அதிர்ஷ்ட மிர்த்கா க்ஷேத்திரத்தையடைந்து அக்ஷக்ஷேத்திரத்தி லுள்ள பதஞ்சலி முனிவரைக்கண்டு வணங்கி அவரது அனுமதியின் பேரில் சூர்ய புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வாயேயானல், அத்தீர்த்தத்தின் பிர பாவத்தால் முன்னுள்ள சரீரத்தையடைவாய், அத் தீர்த்தக்கரையில் பிரகாசிக்கிற ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமிக்கு கார்த்திகை மாதம் சுக்ல பட்ச தசமியில் ரதோர்ச்சவத்தை செய்துவைப்பா யானல் மிகவும் பரிசுத்தனுவதுடன் உனது பிதுர்க் களும் கரையேறுவார்கள், நீயும் மோட்சத்தை யடைவாய் என்று உரைத்தனர்.

அது கேட்ட வேடுவனன தர்மவர்மன் அக்ஷ க்ஷேத்திரம் எந்த இடத்தில் இருக்கிறது என்று கேட்க வசிஷ்டரானவர் உத்திர காவேரியின் வடகரையி லுள்ளது மிகவும் பிரசித்தி வாய்ந்தது. அவ்வட கரையை அணுகினலே அக்ஷக்ஷேத்திரம் இன்ன தென்று தெரியவரும். ஆகையால் அவ்விடம் செல் என்று சொன்னர். அது கேட்டவுடன் மிகுந்த பய பக்தியுடன் வணங்கி முனிவரது அனுமதி பெற்றுக் கொண்டு அவ்வனத்தை விட்டு புறப்பட்டனன். அவ் வசிஷ்ட முனிவரும் தனது சிஷ்யர்களோடுகூட தனது இருப்பிடம் சென்றார்.

தர்மவர்மன் வசிஷ்ட மகா முனிவரது உபதேசப்படி அதிர்ஷ்டமிர்த்திகாக்ஷேத்திரத்தையடைந்து அந்த க்ஷேத்திரத்திலுள்ள சூர்ய புஷ்கரணி தீர்த்தத்தில் பதஞ்சலி முனிவருடைய அனுமதியின்பேரில் ஸ்நானம் செய்து வேடரூபம் நீங்கி மிகவும் காந்தியுள்ள பூர்வ தேகத்தையடைந்தான். பிறகு தனது ஊரிலிருந்து தனது பத்தினிகள், புத்திரர்கள், சொத்துக்களையும் இவ்விடத்துக்கு வரவழைத்துக்கொண்டு விபூதி ருத்ராட்சங்களை தரித்தவராய், அத்தீர்த்தக்கரையில் அநேக விதமான தான தர்மங்களைச் செய்து, அத்தீர்த்தக்கரையில் பிரகாசிக்கிற ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை தெரிசித்து அவரது ஆலயம் ஜீரணமாயிருக்கிறதைக் கண்டு மனம் சகியாதவராய் அவ்வாலயத்தை புதிப்பித்து வீதிகளை வகுத்து சூர்ய புஷ்கரணி தீர்த்தத்திற்கு நான்கு பக்கங்களிலும் படிக்கட்டுகளைக் கட்டி ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருக்கும் ஸ்ரீ அம்புசாட்சிக்கும் மற்றுமுள்ள பரிவாரங்கட்கும், தனித்தனியாக வேத மந்த்ரங்களோடும், கான வாத்திய கோஷங்களோடும், நானாவித திரவியங்களினாலே அபிஷேக முதலான உபசாரங்களை நடத்தி, அநேகம் தடவை பிரதட்சணம் செய்து வணங்கி, ஸ்வாமியைப் பார்த்து, ஏகராயும், பிர்மமாயும், தனக்கு இரண்டாம் பேர் இல்லாதவராயும் சர்வவியாபியாயும் க்ஞாதா, க்ஞானம், க்ஞேயம் (கருதுகிறவன், கருதுகிறது, கருதப்படுகிறவன்) என்ற மூன்று ரூபங்களையுடையவராயும், லோக சங்கராகிய உமக்கு நமஸ்காரம். பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், எந்த பரமசிவனைக் குறித்து யக்யங்களினாலே ஆராதிக்கிறார்களோ, எந்த பரமசிவனை தியானம் செய்து, ஞானிகள் கர்மபந்தங்களினின்றும் விடுபடுகிறார்களோ அப்படிப்பட்ட பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன். எந்த பரமசிவனை பூஜை பண்ணி மிருகண்டுவின் புதல்வரான மார்க்கண்டேயரானவர் நீண்ட ஆயுளோடு கூடினவராய்

ஆனாரோ இப்பேர்ப்பட்ட பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன். எந்த பரமசிவனை வைகுண்ட வாசியான மகாவிஷ்ணுவானவர் தனது நேத்திரத்தாமரையில் அர்ச்சித்து சக்கரம் என்னும் ஆயுதத்தைப் பெற்றாரோ அப்படிப்பட்ட பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன். காணபடுகிறதுமான இவ்வுலகம் யாவற்றும் எந்த பரமசிவனாலே உண்டுபண்ணப்பட்டதோ ரட்சிக்கப்படுகிறதோ சம்கரிக்கப்படுகிறதோ ஞான்ய சொரூபராயும், ஆனந்தராயும், நித்தியராயுமுள்ள அப்பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன் என்று இம்மாதிரி அநேகவிதமான ஸ்தோத்திரங்களால் துதித்து மிகவும் ஆனந்தப் பரவசனாய், தண்டம்போல் பூமியில் வீழ்ந்து நமஸ்கரித்து சிறிது நேரம் கழித்து எழுந்திருந்து அவரது அருளைப் பெற எண்ணி, ரதங்கள், வாகனங்கள் முதலானவைகளைத் தயார் செய்து, கார்த்திகை மாதம் சுக்ல பட்சத் தசமியில், சகல வாத்தியங்களோடு கூட, ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வராருக்கு ரதோர்ச்சவம் முதலானவைகளை வெகு சிறப்பாக செய்து வைத்தனன். இம்மாதிரியாகவே கொஞ்சகாலம் அக்ஷேத்திரத்தில் வசித்திருந்து, தனது ஊர் சென்று ஆயிரம் வருஷம் புத்ர களத்திரர்களுடன் சர்வ போகங்களையுமனுபவித்துக்கொண்டு சுகத்துடன் வாழ்ந்திருந்தான். மேலும் ஒவ்வொரு வருஷங்களிலேயும் அக்ஷேத்திரத்தையடைந்து இப்பதஞ்சலீஸ்வராருக்கு தவறாமல் ரதோர்ச்சவத்தை நடத்தி வந்தனன். அப்புண்ணியப் பிரபாவத்தினாலே அவனது பிதுர்க்கள் கரையேறினதுமன்றி, அவனும் முடிவில் சொர்க்கத்தையடைந்து, அங்குள்ள போகங்களையனுபவித்து மறுபடியும் பூமியில் பூர்வ ஞானத்தோடு கூடி சோழதேசத்துக்கு அரசனாய் ப்ருது கீர்த்தி என்னும் பெயர் பெற்று க்ஷத்திரியர் மரபில் அவதரித்து சத்ய சந்தனாய் மிகவும் தர்மங்களை செய்கிறவனாய், சர்வ சத்துருக்களையும்

தும்சம் பண்ணி இப்பூமண்டலத்தில் ஏகசக்ராதிபதியாய் அனுபவித்துக்கொண்டும், பூர்வ புண்ணியப்பிரபாவத்தினுல் இந்த அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரத்தை மறுபடியும் அடைந்து சூர்ய புஷ்கரணி தீர்த்தக்கரையில் அஸ்வமேதம் என்னும் பெரிய வேள்வியைச் செய்து அங்குள்ளவர்களும் தன்னுடன் கூட வந்தவர்களுமான பிராம்ணர்கள், முதலானோர்களுக்கு, அவரவர் இஷ்டம் போல் சகலவித உபசாரங்களைச் செய்து கடைசியில் தாம் சம்சாரபந்தத்தினின்றும் பற்றுதலில்லாதவனுய் ராஜரிஷி என்னும் பெயர் பெற்று ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருடைய திருவருளால் மோட்ச சாம்ராஜ்ய சுகத்தையடைந்தான். இந்த அத்தியாயத்தை எவர்கள் படிக்கிறுர்களோ, கேட்கிறுர்களோ, அவர்கள் சாயுச்ய முக்தியையடைகிறுர்கள் என்பதற்கு சந்தேகமேயில்லை.

## பத்தாவது அத்தியாயம்.

---

ஸ்ரீ அம்பு சாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருக்கு ரதோத்ஸவம் செய்விக்க வேண்டிய முறை செய்விப்பவர்கள் அடையும் பலன், மாண்டவ்ய மகரிஷி தவம் செய்து வரம் பெற்ற படலம்.

ஓ ! சுமந்து முனிவரே !! ஸ்ரீ அம்புசாட்சி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருக்கு ரதோத்ஸவம் செய்விக்க வேண்டுமென்று முந்தி தங்களால் சொல்லப்பட்டது. அவ்வுற்சவத்தின் விதியையும் செய்யவேண்டிய மாதம் நட்சத்திரம் முதலானவைகளும் எனக்குச் சொல்ல வேண்டுமென்று தேவசர்மா கேட்க சூதமகாமுனிவர் தமக்கு சுமந்து முனிவர் சொன்ன பிரகாரம் சொல்லத் தொடங்கினர்.

ஓ! தேவசர்மனே!! ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருக்கு ரதோத்ஸவ விதியைக் குறித்து கேட்டனே அதைச் சொல்லுகிறேன் சாவதான மனதோடு கேள். கார்த்திகை மாதத்திலேயோ, வைகாசி மாதத்திலேயோ சுக்ல பக்ஷம் தசமி அன்று அந்த ரதோத்ஸவத்தை செய்யவேண்டும். அவ்வுற்சவத்தை சுக்லபக்ஷம் பிரதமை தினத்தில் ஆரம்பித்து ஒவ்வொரு நாளும் வரிசையாக காலையிலும் மாலையிலும் சந்திரப்ரபே சூர்ய ப்ரபே மயில், கிளி, யானை, குதிரை, பல்லக்கு, புஷ்பக விமானம் கைலாச பர்வதம் ரிஷபம் முதலான வாகனங்களில் விநயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர் அம்பிகை இவர்களோடு கூடிய ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை மேற்கண்ட வாகனங்களில் ஆரோகணம் செய்வித்து சகலவித வாத்ய கோஷங்களுடன் வீதி உற்சவத்தை செய்வித்து ஏகாதசி தினத்து கல்பக விருக்ஷ வாகன உற்சவத்தையும், துவாதசியில் அர்க்க புஷ்கரணி தீர்த்தத்தில் ஜலக்கிரீடா மகோற்சவம் (தீர்த்தம் கொடுத்தருளல்) செய்வித்த பிறகு திரயோதசியில் காலை வேளையில் துவஜபடா அவரோகணமும் மத்தியான வேளையில் ஸ்தபன பூஜைகளோடு கூடிய மகாபிஷேகத்தையும் அன்று இரவு ரிஷப வாகனத்தில் ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை எழுந்தருளச் செய்து மற்ற பரிவாரங்களோடு கூடவும் தீப வாத்திய கோஷங்களோடு கூடிய வீதி உற்சவத்தை நடத்திவைக்கவேண்டும். இம்மாதிரியாக எவன் ஒருவன் உற்சவத்தை அப்பதஞ்சலீஸ்வரருக்கு நடத்திவைக்கிறானோ அவன் உயிரோடு இருந்தாலும் முக்தி அடைந்தவனே (அதன் பொருள் ஜீவன் முக்தி.)

பின்னும் பிரதமையிலோ அமாவாசையிலோ சுவாதி நட்சத்திரம் வருங்காலத்தில் முன் போலவே அவ்வுத்சவத்தை ஆரம்பித்து உத்யாபனத்தைச் செய்தும் கார்த்திகை மாதத்தில் தீப உற்சவத்தையும் எவன்

ஒருவன் செய்கிருனே எவர்கள் செய்விக்கிருர்களோ அவர்கள் புண்ணிய பலன்களைப்பற்றி சொல்வதற்கு எனக்குத் திறமையில்லை. பூமியிலுள்ள ரஜசுகளை (தூளிகள்) எண்ணிஞலும் எண்ணலாம். அவ்வுத்ஸவத்தை நடத்திவைக்கும் புண்ணியவான்களுக்குள்ள பலன்களைப்பற்றி இந்திரன் முதலான தேவர்களினுலேயும் சொல்லுவது அசாத்யம். ஒரு சமயம் சிவபெருமான் வேண்டுமாஞல் அப்புண்யத்தை அறியலாம். ரதத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ அம்பிகையோடு கூடிய அப்பதஞ்சலீஸ்வரரை எவன் பார்க்கிருனே தரிசிக்கிருனே அவன் பரமபதத்தை அடைகிருன். எவன் பிரதட்சணம் செய்கிருனே அவன் அஸ்வமேதம் என்னும் வேள்வியின் பயனை அடைகிருன். என்பதற்கு சந்தேகமேயில்லை. ரதத்தினுடைய வடத்தைப் பிடித்து எவன் இழுக்கிருனே அவன் ஜீவன் முக்தன் என்பதற்கு விசாரிக்கவேண்டாம்.

மறுபடியும் அந்த தேவசர்மாவானவர் சுமந்து முனிவரைப் பார்த்து உங்களது முகத்தினின்றும் வெளிவந்த சிவகதைகளான அமிர்தங்களை பானம் பண்ணியும் திருப்தியடையாதவனுய் மறுபடியும் அக்ஷேத்திரத்தினுடையதும், அத்தீர்த்தத்தினுடையதுமான வைபவங்களை விசேஷமாய்க் கேட்க இச்சிக்கிறேன். ஷட்குணங்களும் உற்பத்தி விஞசம், பஞ்சபூதங்களுடைய வருதல், போதல், ஞானம், ஐஞ்ஞானம், நிறைந்தவர்களான தாங்கள் இன்னும் சொல்லவேண்டுமென்று வேண்டினர். அது கேட்ட சுமந்து முனிவர் மிகுந்த சந்தோஷத்துடன் ஓ! தேவசர்மனே உனது புண்ணிய விசேஷத்தையும் சிவ பக்தியையும் நான் என்னென்றுரைப்பேன். அந்த அதிர்ஷடமிர்த்திகா க்ஷேத்திரத்தின் மகாத்மியத்தை சம்பூர்ணமாய்ச் சொல்ல எனக்கு சக்தியில்லை என்பது நிச்சயம். ஆயினும் ஏதோ

கொஞ்சம் சொல்லுகிறேன் கேள். என்று சொல்லத் தொடங்கினர்.

அக்ஷக்ஷேத்திரத்திலிருக்கிற சூர்ய புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்ரீ பதஞ்சலீஸ்வரர் ஸ்ரீ அம்புசாட்சியோடு (சிவபெருமான்) வசித்து வருகின்றனர். அதற்கு ஓர் இதிகாசத்தை சங்கிரஹமாக சொல்லுகிறேன். இந்த இதிகாசத்தை கேட்ட மாத்திரத்தில் பிராணிகள் கோடி ஜென்மாக்களில் உண்டான பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள். அதைச் செவ்வையாகச் சொல்லுகிறேன் கேள்.

முன்னம் ஒரு சமயம் கிருதயுகத்தில் மாண்டவ்வியர் என்று பெயருள்ள ஒரு முனிவர் தனது தபசுக்கு சித்தியைக் கொடுக்கக் கூடிய இடம் எது என்று எண்ணும் காலத்து ஓர் ஆகாயவாணி ஓ முனிவரே அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரம் என்னும் ஓர் ஸ்தலம் இருக்கிறது. அத்தலத்தில் ஸர்வசித்திகளையும் கொடுக்கக்கூடிய சூர்ய புஷ்கரணி என்று ஓர் தீர்த்தம் இருக்கிறது. அத்தலத்தில் நாரதர் வசிஷ்டர் முதலானவர்கள் தாங்கள் தங்கள் தபசின் சித்தியை அடைந்தார்கள். அது தான் உன் தபசுக்கு சித்தி தரக்கூடிய இடம் அவ்விடம் செல் என்று ஓர் சப்தம் உண்டாயிற்று.

அது கேட்ட அம்முனிவர் வெகு சீக்கிரமாக பற்பல சிவஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் இம்மதூக வனத்தை அடைந்தார். தெரிசித்த மாத்திரத்தில் சர்வ பாவங்களையும் போக்கக் கூடியதாயும் பக்ஷிகளாலேயும், ஜலசரங்களாலேயும் தாமரை முதலான புஷ்பங்களாலேயும் ஓங்கார சப்தம் போன்ற அலைகளினாலேயும்

மிகவும் அழகு வாய்ந்ததாயும், தேவாள், சித்தாள், முனிவர்கள், அப்ஸரோகணங்கள் (அப்ஸர ஸ்திரீகளின் கூட்டம்) முதலானவர்களாலேயும் சூழப்பட்டதாயும் ஸ்நானத்திருலேயும், ஆசமனத்தாலேயும், தரிசனத்தாலேயும், அக்னி போல சர்வ பாபங்களையும் தகிக்கிறதாயும் சிரார்த்தாகளாலேபி தூர்க்களுக்கு அக்ஷயமான சொர்க்க லோக வாசத்தை அளிக்கின்றதாயும், விரதம், ஜபம் முதலானவைகளுக்கு ஆங்காங்குறைத்த பலன்களை கோடி பங்குகளாக செய்கிறதாயும், ஜென்ம நட்சத்திரம் இருது, அயனம், சங்காராந்தி, அமாவாசை, பௌர்ணமி, சூர்யக்கிரஹணம், சந்திரக்கிரஹணம் முதலான புண்ணிய காலங்களில் ஸ்நானம் பண்ணிருல் ஆயிரம் தடவை கங்கையில் ஸ்நானம் பண்ணின பலன்களை தரக்கூடியதாயும் சோமவாரத்தோடு கூடிய அமாவாசையிலேயும் சைத்ர விஷுவம், துலாவிஷுவம், முதலான காலங்களிலேயும் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு அனந்த புண்ணிய பலத்தை கொடுக்கக்கூடியதாயும், புனிதனர்களான பிர்மரிஷிகளால் சூழப்பட்டதாயுமுள்ள அந்த தீர்த்தத்தை தரிசித்தார்.

அதைக்கண்ட மாத்திரத்தில் மிகுந்த சந்தோஷத்துடன் இந்த இடமே நமது தபசுக்கு சித்தியை தரத்தக்கவல்லது என்று எண்ணி சிவபெருமானை ஹிருதயத்தில் தியானம் பண்ணிக்கொண்டு அத்தீர்த்தக்கரையிலேயே ஆயிரம் வருஷகாலம் ஆகாரமற்றவராய் இந்திரியங்களை அடக்கினவராய் ஒருவராலேயும் தன்னை சமீபித்து அணுகமுடியாதவராயும் மிகவும் கடுமையான தபசைச் செய்துவந்தனர். இப்படியிருக்குங் காலத்தில் இவரது தபசின் வலிமையால் துயரடைந்த தேவர்கள் இவரது தபசை கெடுக்க வேண்டி உபாயத்தை சிந்திக்கும் தருணத்தில் ரம்பை என்னும் அப்ஸர ஸ்திரீயானவள் ஓ தேவர்களே அம்முனிவருடைய

தபசை விளையாட்டாக கெடுத்து விடுகிறேன். யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்று சொன்னதை கேட்ட தேவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் இவருடைய தபசை கெடுக்க வேண்டி அந்த ரம்பையை அனுப்பினார்கள். அவளும் இவர் சமீபம் அணுகி இவரது 4 பக்கங்களிலேயும் சிருங்காரரஸத்துக்கு உற்பாதமான நானுவிதமான விருக்ஷங்கள் நிறைந்த உத்தியான வனத்தை தனது மாய்கையால் உண்டுபண்ணி நானுவிதமான பூஷணங்களைத் தரித்தவளாய் மந்தகாசத்தோடு கூடினவளாய் தனது கால்சிலம்பினது சப்தத்தால் உலகத்தை கவருகிறவளாய் அம்முனிவருக்கு முன்பாக உலாவிக்கொண்டிருந்தனள். சற்று நேரத்தில் அம்முனிவர் தனது முன்பாக உலாவும் அந்த ரம்பையைக் கண்டு அவளது அபிப்பிராயத்தை மனதினுல் அறிந்து கண்கள் சிவக்க உதடுகள் துடிக்க கோபத்தினுல் நிமிர்ந்து அவளைப் பார்த்தனர்.

அப்படிப் பார்க்கும் தருணத்தில் அவரது நேத்திரங்களில் அக்னியானது பிரகாசித்தது. இம்மாதிரி கோபக்குறியோடு கூடின அந்த மாண்டவ்யமுனிவரைப் பார்த்து அந்த ரம்பை மிகுந்த பயத்தோடும் பரபரப்போடும் அந்தர் தியானமானுள் (மறைந்தாள்) அவள் மாயையினுல் செய்யப்பட்ட உத்தியான வனமும் மறைந்தது. அதன் பிறகு அம்மாண்டவ்ய முனிவரானவர் அந்த கோபத்தினுல் உண்டான தனது நேத்ராக்னியை அர்க்க புஷ்கரணி தீர்த்தத்தில் போட்டனர். பிறகு அந்த அக்னியானது 100 யோஜனை தூரம் பரவினதாய் மற்ற யாவரையும் அணுக விடாததாய் ஜ்வாலைகளோடு கூட அத்தீர்த்தத்தில் பரவி எரிந்தது. அவ்வக்னி ஜ்வாலையின் கொடுமையால் துயரடைந்த தேவர்கள் தேவேந்திரனை சரணமாய் அடைந்து அஞ்சலி பந்தத்துடன் கூடினவர்களாய்

ஓ தேவராஜனே மாண்டவ்ய முனிவரது தபோக்னியால் பீடிக்கப்படும் எங்களை காத்தருளல் வேண்டும் என்று வேண்ட அதுகேட்ட தேவேந்திரன் புன்னகை செய்து அத்தேவர்களைக் குறித்து சர்வ லோகங்களுக்கும் ஆதி தேவரான பரமசிவன் தான் நியந்தா, (கர்த்தா) ஆகையால் அவரையே நாம் சரணமாக அடைவோம் என்று தேவர்களுடன் இக்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை சரணமாக அடைந்து உலகத்தின் பீடையை போக்கக்கூடியவராயும் சத் புருஷர்களுக்கு அபயத்தை அளிக்கிறவராயும் உலகத்துக்கு முதல் காரணராயும் அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரத்திற்கு அதிபதியாயும் தங்கம் போன்ற மேனியை உடையவராயும், பரபிர்ம சொரூபியாயும் அறிய முடியாதவராயும், ஞான மூர்த்தியாயும் குணத்ரேய ரூபராயும் ப்ரகிருதியாயும், பூமி முதலான பஞ்சபூதங்கள் வடிவமாயும், பிர்மானந்தமே தனது வடிவமாயும், சமஸ்த பக்தாளை ரக்ஷிக்க வேண்டி தனது இச்சையினால் எடுக்கப்பட்ட விக்ரக வடிவராயுள்ள உம் பொருட்டு நமஸ்காரம் எங்களை மாண்டவ்யருடைய தபோக்னியின் உபாதியிலிருந்து கார்த்தருளவேண்டும் உம்மையே சரணமாக அடைகிறோம் என்று பிரார்த்தித்து வேண்டிக்கொண்டார்.

பிறகு அத்தேவர்களது துயரை நீக்க எண்ணி சிவபெருமான் அவர்கள் முன் தோன்றி ஏ தேவர்களே மனதிலுள்ள கவலையை விட்டு விடுங்கள் உங்களது உபத்திரவத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்கிறேன் என்று சொல்லி அத்தேவர்களினுலேயும் பிரமத கணங்களினுலேயும் புடை சூழ தனது திருக்கரங்களில் பரசு, மான், அபயம், வரதம் இதுகளையும் சிரசில் கங்கையையும் சந்திரனையும் தரித்து கிரீட குண்டலம் முதலான ஆபரணங்களையும், விபூதி ருத்ராக்ஷங்களையும், தனது

திருமேனியில் தரித்தவராய் தனது திருமேனியில் அணியப்பட்ட கந்த புஷ்ப வாசனைகளால் உலகத்தை வாசனையோடு கூடினதாக செய்கிறவராய் ஸ்ரீ பார்வதி தேவியாரோடு கூடி ரிஷபவாகனத்தில் ஏறிக்கொண்டு தேவர் முதலானவர்களோடு ஜெய ஜெய சப்தங்களுடனும், மற்றும் பல வாத்தியங்களும் முழங்க அச்சூர்ய புஷ்கரணியின் கரையில் தபசு செய்து வரும் அம் மாண்டவ்ய முனிவருக்கு தனது தெரிசனத்தை கொடுத்தருளினர்.

இம்மாதிரியான சிவபெருமானைக் கண்ட அம் முனிவரானவர் மிகுந்த பயபக்தியுடன் வேதாந்த ஸ்துதிகளாலே ஸ்தோத்திரம் செய்து பன்முறை தாள் பணிந்து பகவானது திருமேனியை நேத்திரங்களாலே கண்டு களித்து மரம் போல் அசைவற்றவராய் நிற்கும் தருணத்தில் சர்வாந்திரியாமியாயும் சர்வ சாட்சியாயும் இருக்கிற பரமன் ஒன்றும் தெரியாதவர்போல ஏ மாண்டவ்யா !! இப்பொழுது எதைக்குறித்து தவம் செய்கிறாய் ? உன் மனதிலுள்ள எண்ணத்தை வெளியிடு ? என்று மிகுந்த கருணையுடன் கேட்டார்.

அது கேட்ட அம்முனிவர் உலகத்துக்கு கர்த்தாவான ஓ பரமனே எல்லாம் தெரிந்த தங்களிடத்து நான் வேண்டத்தக்கது ஒன்றுமில்லை. ஆயினும் இப் பிரபஞ்ச வாழ்க்கையில் விருப்பமில்லாத நினதுகைவல்யமென்கிற மோக்ஷ சாம்ராஜ்ய சித்தியை விரும்புகிறேன். மற்றொன்றும் வேண்டேன் ஓ தயாநிதியே! அதை எனக்கு அளித்து காத்தருளல் வேண்டும் என்று மிகவும் பிரார்த்தித்தனர்.

அதைக்கேட்டு அச் சிவபெருமான் திருவுள மகிழ்ந்து உனது இஷ்டப்படியே தந்தேன். ஆயினும் உனது தபசின் மகிமையையும் இக்ஷேத்திரத்தினுடையவும், தீர்த்தத்தினுடையவும் மகாத்மியத்தை

யும் எளிதில் உலகத்திலுள்ளோர் அறியும் பொருட்டு பிரமரிஷியாய்இருக்கும் தன்மையையும் ஒரு கல்ப கால பரியந்தம் நீண்ட ஆயுளையும் அதுபோலவே திரி லோகங்களிலேயும் தடங்கலில்லாத கமனத்தையும் (செல்லுதல்) கொடுத்திருக்கிறோம். அக்காலம் முடிந்த பின் நமது ஸ்தானத்தை அடைந்து கைவல்ய பெரும் பேறு பெறுவாய். இக்ஷேத்திரமும், தீர்த்தமும் மிகவும் பரிசுத்தமானதிஞலேயும் இந்த இடத்தில் செய்யும் தபசு முதலானவைகள் ஒன்று கோடி பலன் களைத் தருவதாலும் நமக்கு பிரியமான இடமானதாலே யும் உனக்கு அதிகமாக இவ்வரங்கள் தந்தோம் என்று சொல்லி அம்முனிவரும் மற்றுமுள்ள தேவர் முதலாயி ஞேரும் பார்க்கும் பொழுதே அத்தீர்த்தத்தில் ஜொலிக் கிற அம்முனிவரது தபோக்னியில் பார்வதி தேவியா ரோடு கூடி கலந்து மறைந்தனர். மறைந்ததும் அவ் வக்னியும் சமனமடைந்தது, லோகத்திஞலுண்டான உபத்திரவங்களும் நீங்கின. பின்னும் அவ்வக்னியில் மறைந்து கொண்ட பரமன் அத்தீர்த்தத்தில் தனது சிரசிலுள்ள கங்கையை அத்தீர்த்தத்தை அடையும்படி கட்டளையிட்டார். அக்கட்டளையை சிரமேற்கொண்ட கங்கையானவள் அத்தீர்த்தத்தை அடைந்து தனது பாபத்தையும் போக்கடித்துக் கொள்ளுகிற வரையில் அத்தீர்த்தத்தில் எப்பொழுதும் வசித்து பிரகாசிக் கின்றனள். அது முதற்கொண்டு அத் தீர்த்தம் உலகத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களுக்கெல்லாம் உத்தமமாக ஆயிற்று. சிவபெருமானே அத்தீர்த்தத் தில் வசிக்கிருர் என்ருல் இன்னும் அதன் பெருமையை பற்றி உரைக்க வேண்டியது என்ன இருக்கின்றது. சர்வ புண்ணிய காலங்களிலேயும் சர்வ பலன்களை உத்தேசித்து சர்வ தானங்களையும்செய்ய அத்தீர்த்தமே சிறந்தது. இந்த அத்தியாயத்தை எவன் படிக்கிருனே எவன் கேழ்க்கிருனே அவன் பரமனது இருப்பிடம் செல்லுகிருன்.

## பதினொன்றும் அத்தியாயம்.

சுபத்திரன் என்னும் அரசன் புத்திரப்பேறு அடையும் நிமித்தம் இக்ஷேக்ஷத்திரத்தை அடைந்து க்ஷேத்திர மூர்த்தியை பூஜை செய்து புத்திரப்பேறு அடைந்து இறுதியில் முக்தி அடைந்தது. அர்ஜுனன் முதலான பல அரசர்களும் தேவர்களும் முனிவர்களும் இக்ஷேக்ஷத்திர தரிசனம், தீர்த்த ஸ்நானம் முதலியவை களால் தங்கள் தங்கள் இஷ்ட சித்தி பெற்றது புராண மகிமை உரைத்தது. ஆகிய படலம்.

தேவசர்மா ஓ சுமந்து முனிவரே! இதற்கு முன் உங்களால் சொல்லப்பட்ட பற்பல சிவ க்ஷேத்திரங் களிலுள்ள மகாத்மியங்களைக் கேட்டிருந்தும் அதுகள் இக்ஷேக்ஷத்திரத்தினுடைய மகாத்மியத்தைப்போல், திருப்தியை எனக்குக் கொடுக்கிறதுகளாக இல்லை. இக்ஷேக்ஷத்திரத்திலுள்ள மகாத்மியத்தைக் கேட்டு பேரானந்தப் பெருங் கடலில் மூழ்கினவனாயிருந்த போதிலும், இன்னமும் கேட்க பேரவாவுள்ளவனாய் இருக்கிறேன், என்று கேட்டதற்கு அச் சுமந்து முனிவரானவர் சொன்ன பிரகாரம் சூதமகாமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

முன்னம் ஓர் காலம் திரேதாயுகத்தில் அயோத் தியா நகரத்தில் க்ஷத்திரியர் மரபில் பிறந்தவனாயும், மேதாவியாயும், ராஜ நீதிகளை அறிந்தவனாயும், பல வேள்விகளினால் பரமசிவனை திருப்தி செய்தவனாயும், சதா தான தர்மங்களை செய்கிறவனாயும், சத்திய சந்த னாயும் யுத்தத்தில் முன் வைத்த காலை பின் வாங்காமல் சத்துருக்களிடமிருந்து ஜெயத்தை பெறுகிறவனாயும், இந்திரியங்களை அடக்குகிறவனாயுமுள்ள சுபத்திரன் என்னும் பெயருள்ள ஓர் அரசன் இருந்தான்.

அவன் சிவ பெருமானிடத்து பக்தி வாய்ந்தவர் களுக்குள்ளே முதன்மையானவன். அவனுக்கு குணவதியாயும், மிகவும் அழகு வாய்ந்தவளாயும், தனது பதியின் சிஷ்ருஷைகளிலே சதா பற்றுதல் உள்ளவளாயும் சர்வ தானங்களில் ஆசக்தியோடு கூடினவளாயும் உள்ள விசாலாக்ஷி என்று பெயருள்ள ஓர் பத்தினி இருந்தாள்.

இவ்விருவர்களும் ஒருவருக்கொருவர் மிகவும் அன்னியோன்னியம் பிரிய மனதோடு கூடினவர்கள். இவ்விருவர்களுக்கும் புத்திரன் இல்லாத குறைவன்றி வேறு யாதொரு குறைவுமில்லை. இவர்கள் ஒருகாலம் அயோத்தியா நகரத்துக்கு சமீபத்தில் 6 யோஜனை தூரத்தில் உள்ளதாயும், சரையூ நதிக்கரையில் உள்ளதாயும் உள்ள கோஹ நதம் என்று பெயருள்ள சிவ க்ஷேத்திரத்தில் சில காலம் வசித்து வந்தார்கள்.

இப்படி இருக்கும் காலம் தங்களுக்குப் புத்திரப் பேறு இல்லாததனுல் மிகவும் துக்கத்தோடு கூடினவர்களாய் அங்குள்ள மகரிஷிகளோடு கூடிக் கலந்து பரம சிவனைக் குறித்து புத்திரப்பேறு அடையும் நிமித்தம் தபசு செய்யப் போகிறேன். எனது தபசினுல் சந்தோஷத்தை அடைந்த பரமசிவனும் எனக்கு புத்திரனை கட்டாயம் அளிப்பார் என்பதற்கு சந்தேகம் இல்லை.

முன்னம் ஓர் காலத்தில் பகீரதன் என்னும் ஓர் அரசன் தனது பிதுர்க்களை கரை ஏற்ற எண்ணி தபசு செய்து சிவபெருமானுடைய அருளால் கங்கையை வரவழைத்து தனது பிதுர்க்களை கரையேற்றினுன். அப்படியே தேவேந்திரனும் சிவபெருமானைக் குறித்து தவம் பண்ணியே அப்பரமனது அருளால் அடையப் பட்ட பலத்தினுலே விருத்திரன் என்று பெயர் பெற்ற தன் சத்துருவை வென்றனன். திலீபன் முதலான

சக்கரவர்த்தியும் இப்புவியில் பரமசிவனை உபாசித்தே இஷ்ட போகங்களை அனுபவித்து பிறகு கைலாஸம் சென்றார்கள்.

ஆகையினால் சிவபெருமானது திருவருளை நீக்கி வேறு எவ்வித உபாயத்திலேயும் நமது இஷ்டம் பூர்த்தியாகாது. ஆதலால் எவ்விதத்திலேயும் பரமசிவனைக் குறித்து தபசு செய்யப்போவதே சரி என்ற நிச்சயத்துடன் தனது ராஜ்யத்தை மந்திரியிடம் ஒப்புவித்து தனது பாரியாள் விசாலாக்ஷியுடன் கங்கா தீரத்தையடைந்து கடுமையான தவத்தைசெய்ய ஆரம்பித்தனன். முதலாவது மாதத்தில் கந்த மூலாதி, ஜலம், இவைகளை சாப்பிடுகிறவர்களாயும் இரண்டாவது மாதத்தில் காய்ந்த சருகுகளை சாப்பிடுகிறவர்களாயும், மூன்றாவது மாதத்தில் கல், மண் முதலியவைகளை சாப்பிடுகிறவர்களாயும் நாலாவது மாதத்தில் ஆகாரம் இல்லாதவர்களாய் இருந்து கொண்டும் பரமசிவனை ஹிருதயத்தில் தியானம் செய்துகொண்டும், ஒற்றைக்காலை கீழே ஊன்றிக் கொண்டும், மற்றொரு காலை மேலே தூக்கிக்கொண்டு நின்றும், இன்னும் கடுமையான தபசுகளையும் செய்து கொண்டிருந்தார்கள்.

இவ்விதம் ஐந்து மாதங்கள் முடிந்த பிறகு பக்தர்களுடைய அபீஷ்டங்களை பூர்த்தி செய்கிறதே தனக்கு முக்கிய காரியமாக உள்ள சிவபெருமான் அம்பிகையோடு கூட ரிஷபாரூடராய் தேவேந்திரன் முதலான தேவர்களாலேயும் சித்தாள், சாத்தியாள், கந்தர்வாள் யக்ஷர்கள், கின்னரர்கள், ஜனகாதியோகிகள், இன்னும் மற்றுமுள்ளோர்களாலேயும் துதி செய்ய இவ்விருவர்களுக்கும் முன் தோன்றினர்.

இவ்விதம் தனது முன்பாகத் தோன்றின பரமசிவனை அவ்வரசன் சிந்தையை அடக்கி சிவனிடத்தில்

வைத்த மனதையுடையவனுயிருந்தபடியால் வெளியில் அறியவில்லை. அதுகண்ட பரமன் அவ்விருவர்களுக்கு தனது போதம் உண்டாகும்படி அவ்விருவர்களுடைய ஹிருதயங்களையும் கவர்ந்து மறைந்து நின்றனர். உடன் தமது தியானமானது நாசமடைந்து விட்டபடியால் மிகவும் பரபரப்போடு தங்கள் நேத்திரங்களை திறந்து வெளியில் நோக்கினார்கள். அந்த க்ஷணத்திலேயே தங்கள் ஹிருதயங்களில் எவ்விதமான உருவம் நின்றதோ அவ்வித உருவத்தோடு கூடின பரமசிவனையும் உமாதேவியாரையும் கண்டு எழுந்திருந்து ஆனந்தக் கண்ணீரோடு கூடினவர்களாய் நிற்கத் தங்களோடு (வாய்குளறுதல்) கூடின மொழிகளை உடையவர்களாய் ரோமம் சிலிர்ப்ப இரு கைகளையும் கட்டிக்கொண்டு பன்முறை பிரதக்ஷணம் செய்து நமஸ்கரித்து ஓ தேவ தேவரே லோகங்களால் நமஸ்கரிக்கப்படுகிறவரே சகல புராணங்களிலேயும் முதன்மையாய் கூறப்பட்டவரே, தாமரை போன்ற பாதங்களை உடையவரே, திரிபுரனை எரித்தவரே, சம்சாரபந்தத்தினின்றும் விடுவிப்பவரே திரிசூலம் தரித்தவரே, பார்வதியோடு கூடினவரே, மூன்று கண்களோடு கூடினவரே, மகாதேவரே, அப்பேர்ப்பட்ட உம் பொருட்டு நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!! இவ்விதம் பரமனை பற்பல ஸ்துதிகளால் துதித்து அவரது எதிரில் நின்றூர்கள். பிறகு சிவ பெருமானும் மிகுந்த சந்தோஷத்தோடு மந்தகாசம் செய்து, தனது திருக்கரத்தால் அவ்விருவரையும் ஆலிங்கனம் பண்ணி அவ்வரசனைக் குறித்து சொல்லத் தொடங்கினர்.

உங்கள் இருவர்களுடைய தபசினுலே பிரசன்னமாகிறேன். சந்தோஷத்தோடு கூடினவனுமாகிறேன். உங்கள் இருவர்களுக்கு நல்ல குணங்களோடு கூடினவனுயும், கீர்த்தி வாய்ந்துள்ளவனுயும் உள்ள புத்திரனைத் தந்தோம் ஏ! ராஜேந்திரனே உனது பார்யை

யோடு கூட உத்தரகாவேரியின் வடகரையில் மிகவும் கியாதி வாய்ந்ததாயும் பெரியதாயும் சர்வ பாவங்களேயும் போக்கடிக்கிறதாயும், சிதம்பர க்ஷேத்திரத்திற்கு சமீப மாயும், மிகவும் ரமணீயமாயும், மதூகவனம் என்று பெயர் பெற்றதாயுமுள்ள அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் ஓர் ஸ்தலம் இருக்கிறது. அந்த ஸ்தலத்தில் பதஞ்சலி முனிவரின் வேண்டுகோளால் லிங்க ரூபியாகப் பிரகாசிக்கிருேம். அத்தலத்தில் சூர்ய புஷ்கரணி என்று பெயருள்ள ஓர் தீர்த்தமும் இருக்கிறது. மற்றும் பற்பல தீர்த்தங்களும் உண்டு. அத்தலத்தை அடைந்து சூர்ய புஷ்கரணியில் ஸ்நானம் செய்து ஒருமாத காலம் என்னே பூஜை செய்வாயே யாஞல் புத்திரனே அடைவாய் என்று சொல்லி பகவான் அந்தர்த்யானம் ஆஞர்.

பிறகு அந்த சுபத்ரன் என்னும் அரசன் தன் பத்னியோடு கூட இன்னும் பற்பல முனிவர்களுடனும் தண்டகாரண்ய வழியாய் கோதாவரி, கிருஷ்ணு, துங்கபத்ரா முதலான நதிகளில் ஸ்நானம் பண்ணி, காளஹஸ்தி, வெங்கடாத்திரி, காஞ்சீபுரம், அருணுஜலம், விருத்தாஜலம், ஸ்ரீமுஷ்ணம் முதலான பற்பல ஸ்தலங்களே தரிசித்து பிறகு சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து சிவகங்கையில் ஸ்நானம் பண்ணி கனக சபையில் நடனம் புரியும் சபாநாயகரை தரிசனம் பண்ணி பிறகு அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் மதூக வனத்தை அடைந்தான். அடைந்ததும் அங்குள்ள பற்பல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பிறகு உத்தர காவேரியிலும், சூர்ய புஷ்கரணியிலும், ஸ்நானம் செய்து தான தர்மங்களிலேயும், தீர்த்த ஸ்ரார்த்தம், தீர்த்தபலி முதலானதுகளே முடித்து பதஞ்சலி முனிவரையும் ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரையும் தரிசித்து சகலவித உபசாரங்களேயும் செய்வித்து கார்த்திகை மாதத்தில் ரதோத்ஸவத்தையும் நடத்தி

வைத்து அந்த ஆலயத்திலுள்ள ஜீர்ணமான பிரதேசத்தை புதுப்பித்து மாசிமீ அமாவாசையில், அருணோதயத்தில், அர்க்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பாயசம், பூசனிக்காய், முதலானவைகளை, பிராமணர்களுக்கு தானம் செய்து, எப்படி பரமசிவன் தனக்கு கட்டளை இட்டனரோ, அப்பிரகாரம் எல்லாவற்றையும் முடித்து தனது ஊர் சென்றனன்.

சில காலத்துக்குள் சிவபெருமானுடைய திருவருளினால் நல்ல தினத்தில், நல்ல வேளையில் ருதுபர்ணன் என்று பெயருள்ள ஓர் புத்திரனையும் அடைந்தான். அப்புதல்வனும் சூர்யவம்சத்துக்கு பிரகாசனாகவும் தனது தகப்பனாரைப்போலவே வீரனாகவும், கியாதிமானாகவும் இருந்தான். பிரதி வருஷமும் தனது பார்யையோடு இவ்வூரை வந்தடைந்து ரதோத்ஸவத்தையும் மகாபிஷேகத்தையும் மற்றும் பல தான தர்மங்கள், பிராமண போஜனம் முதலானதுகளையும் செய்து கொண்டு வந்தான்.

பிறகு தனது வயதான காலத்தில் தனது ராஜ்யத்தை தனது புத்திரனிடத்தில் ஒப்புவித்து மகுடம் சூட்டி இந்த அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரத்திலேயே வந்திருந்து முக்திஅடைந்தான்.

பிறகு அவனது புதல்வனான ருதுபர்ண மகாராஜன் அவ்வரசனுக்கு நடத்தவேண்டிய அவசானக் கிரியைகளை நடத்திவிட்டு ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரரை வணங்கி ராஜநீதி தவறாமல் தனது தகப்பனார் பரிபாலனம் செய்தது போல சர்வப் பிரஜைகளினாலேயும் கொண்டாடுகிறவனாயும், சகல ஐஸ்வரியங்களோடு கூடினவனாயும் வாழ்ந்துகொண்டு பிரதி வருஷமும் ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வரருக்கு ரதோத்ஸவம் முதலானதுகளை நடத்திக்

கொண்டும் மற்றும் பற்பல தான தர்மங்களைச் செய்து கொண்டும் சுகமாய் வாழ்ந்து வந்தான்.

அம்மாதிரியே துவாபரா யுகாந்தத்தில் குந்தி புத்திரர்களான பாண்டவர் ஐவர்களில் ஒருவரான அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்யுங்காலத்தில் கிரமமாக சகல க்ஷேத்திரங்களையும் தெரிசித்து புண்டரீக புரம் என்னும் சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து சிவகங்கையில் ஸ்நானம் பண்ணி கனகசபையில் நடனம் புரிகின்ற ஸ்ரீ சபாநாயகரை தரிசித்து பிறகு கிரமமாக இந்த அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரத்தை அடைந்து அங்குள்ள சூர்ய புஷ்கரணி முதலான தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணி ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்ச லீஸ்வரரை தரிசனம் பண்ணி அச்சிவபெருமானது திருவருளால் பிரணவ க்ஷேத்திரமென்னும் ஓமாம் புலியூரை அடைந்து அங்குள்ள தீர்த்தத்திலும் உத்தர காவேரியிலும் ஸ்நானம் செய்து பிறகு பிரணவத்தின் அர்த்தத்தை அம்பாளுக்கு தக்ஷணாமூர்த்தி ரூபியா யிருந்து உபதேசம் செய்பவராயும் இன்னும் பற்பல முனிவர்களாலேயும் தேவர்களாலேயும் துதிக்கப்படுகிற வராயுமுள்ள சிவபெருமானை வணங்கித் துதித்து வரிசையாக ஸ்ரீரங்கம், ஜம்புகேஸ்வரம், மதுரை முதலான பற்பல க்ஷேத்திரங்களை தரிசனம் பண்ணி பாண்டிய மகாராஜனுடைய புத்திரியாகிய சித்தராங்கதை என்னும் பெயருள்ள கன்னிகையை கல்யாணம் பண்ணிக் கொண்டு பிறகு சர்வ சித்திகளையும் அடைந்தார்.

இன்னும். மற்றுமுள்ள தேவர்களும், முனிவர்களும், அரசர்களும் ஏனையோர்களும் இக்ஷேத்திரத்தை அடைந்து சூர்யபுஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தங்களது பாவங்களை போக்கடித்துக்கொள்வது மன்றி ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீஸ்வர

ருடைய தரிசன பலத்தினுல் தங்கள் தங்கள் இஷ்ட சித்திகளையும் பெறுகிறுர்கள்.

ஓ! தேவசர்மனே !! இக்ஷேத்திரத்தினுடைய மகாத்மியம் எல்லாவற்றையும் சுருக்கமாய்ச் சொன்னேன். இதன் பெருமையைப்பற்றி சொல்வதற்கு இரண்டாயிரம் நாப்படைத்த ஆதிசேஷனுலும் கூட சொல்ல முடியாதது. அதன் அர்த்தத்தை எவன் சொல்லுகிருனே எவன் கேட்கிருனே அவன் அக்கினிஷ்டோமம் என்னும் வேள்வியின் பலனையும் கங்கா ஸ்நான பலனையும் அடைகிருன். கேட்ட மாத்திரத்தில் நித்தியம் அன்னதானம் செய்த பலனை அடைகிருன். படித்த மாத்திரத்தில் ஆறு அங்கங்களோடு கூடின வேதங்களினுடைய பாராயணத்தினுல் உண்டாகும் பலனைப் பெறுகிருன். இப்புராணத்தை எழுதி அப் புஸ்தகத்தை எவன் தனது கிரஹத்தில் வைத்து பூஜை பண்ணுகிருனே அவனுக்கு சமமான புருஷன் ஒருவனும் இவ்வுலகில் இல்லை. அவன் தான் சிவபெருமானுக்கு மிகவும் பிரியமுள்ளவன்.

இந்தப்பிரகாரம் தேவசர்மாவுக்குச் சொன்னதான அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்ரமென்னும் திருக்காளுட்டு முள்ளூர் புராணத்தை சூதமகாமுனிவருடைய திருவாக்கினின்றும் கேட்டு ஆனந்தித்த நைமிசாரண்ய வாசிகளான முனிவர்கள் சகலவிதமான உபசாரங்களினுலே அம்முனிவரை சந்தோஷப்படுத்தி அக்ஷேத்திரத்தை மிகவும் கொண்டாடுகிறவர்களாய் ஆனந்தமடைந்தார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!

அதிர்ஷ்டமிர்த்திகா க்ஷேத்திரமென்னும் திருக்காளுட்டுமுள்ளூர் ஸ்தலபுராணம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ அம்புசாக்ஷி சமேத ஸ்ரீ பதஞ்சலீசுவராயநம :
...காமுனிவர் திருவடி சரணம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்கதண் புனல் வேந்தனும் ஓங்குக
...கதீயதெலா மரனாமமே
...க வையகமுந் துயர் தீர்கவே.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ அம்பாள் பிரஸ், சீர்காழி.